Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 13 புதன்கிழமை (29.07.2015) பக்கங்கள் 20 ஓசை - 301

நாடாளுமன்றத் தேர்தல் - 2015



ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி

## பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள்

உறவுகள் உருக்கமான கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கைது செய்யப்பட்டு காணாமற்போன எமது பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள் அவர்களை கைது செய்தவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டாம் என காணாமற்போனோரின் உறவுகள் ஜனாதிபதியிடம் நேற்று வேண்டுகோள் விடுத்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியை சந்தித்த காணாமற்போனவர்களின் உறவுகள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தனர்.

8 மாவட்டங்களைச் சேர்ந்த காணாமற்போனவர்களின் தாய், தந்தையர்கள் இதில் கலந்துகொண்டு தமது குறைகளை ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

எமது பிள்ளைகள் கைது செய்து காணாமற்போன 19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் விசாரணை விசேட செயலகம் விரைவில்

### யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அதற்கு விரைவில் தீர்வு காண எனது நேரடிக் கண்காணிப்பில் புதிய செயலகம் ஒன்றை விரைவில் உருவாக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நேற்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி காணாமற்போனோரின் தாய், தந்தையர்களைச் சந்தித்த போது 19 ஆம் பக்கம் பார்க்க

# தமிழர் பிரச்சினைக்கு தரப்போகும் தீர்வு என்ன?

## ஐ.ம.சு. விஞ்ஞாபனத்தில் எதுவும் இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலையொட்டி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரால் வெளியிடப்பட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்து திட்டவட்டமான எந்த விதமான தீர்வுத் திட்டமோ அல்லது தீர்வுக்கான ஆலோசனைகளோ முன் வைக்கப்படவில்லை.

இது குறித்து வடக்கு மற்றும் கிழக்கு தமிழர் தரப்புக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளது. இது குறித்து வடபகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

கடந்த வாரம் ஐக்கிய தேசிய முன்னணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை விஞ்சும் விதமாகவும் ஏட்டிக்குப் போட்டியாகவும், நேற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட விஞ்ஞாபனம் அமைந்துள்ளதாக பல தரப்புக்களிடமிருந்தும் அதிருப்திகள் வெளியிடப்பட்டிருக்கிறது. அதேவேளை,

ஆறு மாத காலத்தினுள் புதிய அரசியலமைப்பு முறையொன்றை அறிமுகம் செய்வதோடு தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையை மாற்றியமைத்து புதிய தேர்தல் முறை ஒன்றையும் அறிமுகம் செய்து வைப்பதாக,முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் எதிர்காலத்திற்கான உத்தரவாதம் என்ற தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றுக் காலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதில் உரையாற்றும் போதே மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ செயலிழந்திருந்த நாட்டை செயற்படக்கூடிய நாடாக தாம் மாற்றியமைத்ததாக தெரிவித்தார். நாட்டின் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் 19 ஆம் பக்கம் பார்க்க

## நல்லூரில் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் காணாமற் போனோரின் உறவினர்களால் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமற்போன தமது பிள்ளைகள் தொடர்பில் தமக்கு உரிய பதில் கிடைக்க வேண்டு 19 ஆம் பக்கம் பார்க்க

## அப்துல் கலாமுக்கு யாழில் அனுதாபம் தெரிவிக்க வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் காலமாகிய முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு அனுதாபத்தை தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத்துணைத் தூதரகத்தில் அனுதாபப் புத்தகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அவரின் மீது அன்பு கொண்டவர்கள் அப்புத்தகத்தில் தங்களது அனுதாபங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்றும் இந்தியத் துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



டக்ளஸ் தேவானந்தா

உங்களோடு உங்களுக்காக நாங்கள்





ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

## பொருளாதார வாழ்வுக்கு வளம் சேர்ப்போம்

### மக்கள் சந்திப்பில் டக்ளஸ்

(கோப்பாய்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா கோப்பாய், இருபாலை பகுதி ம்க்களை சந்தித்து அவர்களது தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது அந்த மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து அவர்களின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் வகையில் சுயதொழில் வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அதுமட்டுமன்றி பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவது 19 ஆம் பக்கம் பார்க்க

# வளமான கல்விச்சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம்

## தீவகத்தில் முதன்மை வேட்பாளர் டக்ளஸ்





(ஊர்காவற்றுறை)

தீவகத்தின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மக்கள் எமக்கு அரசியல் பலத்தைத் தரவேண்டியது அவசியமானது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஊர்காவற்றுறை, சின்னமடு கிராமத்தில் அண்மையில் தேவா கல்வி நிலையத்தை திறந்து வைத்த பின் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், எதிர்கால சந்ததியை கல்வியில் முன்னேற்றுவதற்கும், வளமான சமூகத்தை உருவாக்குவதற்கும் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கொண்டவர்களாக நாம் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

அதிலும் குறிப்பாக, தீவகப் பகுதியில் கல்வி, சுகாதாரம், விளையாட்டு உள்ளிட்டதுறைகளின் மேம்பாட்டுக்காக அபிவிருத்திகளை செயற்படுத்தியுள்ளோம். இருந்த போதிலும், சின்னமடு கிராமத்தில் கல்வி நிலையை மேம்படுத்த வேண்டியது எமது தலையாய கடமையாகும். இதனடிப்படையில் தான் இக்கல்வி நிலையத்தைத் திறந்து வைத்து அதன் செயற்பாடுகளை ஆரம்பித்து வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இது வெறும் கட்டடமாக மட்டுமல்லாது, இதனூடாக மாணவர்கள் உரிய பயன்களைப் பெற்று சமூகத்தில் நற்பிரஜைகளாக மிளிர வேண்டும் என்பதே எமது கட்சியின் நோக்கமாகும் என்றும் சுட்டிக்காட்டினார். மக்களின் ஏனைய தேவைப்பாடுகள் தொடர்பிலும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், சரவணையம்பதி சிறிசெல்வக் கதிர்காமம் கோவிலுக்குச் சென்று பூஜை வழிபாடுகளிலும் பங்கேற்றார்.

இதனிடையே, தம்பாட்டி கிராம மக்களையும் சந்தித்த செயலாளர் நாயகம் மக்களின் பிரச்சினைகள், குறை பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட அதேவேளை, அவற் றுக்கான தீர்வுகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

# வீதியை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

அச்சுவேலி ஆவரங்கால் சிவன்வீதியை புனரமைத்துத் தருமாறு இவ்வீதியை பயன்படுததும் 300 இறகும் அதிகமான குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆவரங்காலில் இருந்து இராசவீதி வரை செல்லும சுமார் ஒன்றரை கிலோமீற்றர் நீளமான இவ்வீதி யுத்த சூழலுக்கு முன்பிருந்தே புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதாக ஆவரங்கால் இந்து இளைஞர் மன்றத்தின் பிரதிநிதிகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

கூடுதலான மாணவர்கள், மற்றும் விவசாயிகள் இவ்வீதியை நாளாந்தம் பயன்படுத்திவரும் நிலையில் மழைக்காலங்களில் இவ்வீதியால் செல்வோர் பெரும் இன்னல்களை எதிர்கொள் வதையும் மன்றத்தின் பிரதி நிதிகள் சுட்டிக்காட்டிள்ளனர்.

தேர்தல் காலங்களில் வருகை தரும் அரசியல் பிரதிநிதிகளும் பிரதேச நிர்வாகத்திடம் கூடவே ஊடகங்கள் மூலமாகவும் இவ் வீதியின் நிலைமையை வெளிப்படுத்தியும் கூட இதனை புனரமைப்பது குறித்து கவனம் செலுத்தப்படவில்லையென அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.(168)

# வறிய மாணவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள்

வறிய மாணவர்களுக்கான மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் செயற்றிட்டத்தை வாழ்வகம் நிறுவனம் முன்னெடுக்கவுள்ளது.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப் புலவலுவிழந்தோர் வாழ்வக நிறுவனமானது அதன் முன்னைநாள் தலைவரும் ஸ்தாபகருமான கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் ஒன்பதாவது நினைவு தினத்தையொட்டி வறிய நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்த உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பயனடைய விரும்பும் மாணவர்கள் தகுந்த மருத்துவச் சான்றிதழுடன் இதனுடனான படிவத்தினை உரிய முறையில் பூர்த்தி செய்து தலைவர் வாழ்வகம் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம். எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.மத்திய கல்லூரியில் ஊடகவியலாளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் இன்று ஊடகவியலாளர் மாநாடு இடம்பெறவுள்ளது.

இம்மாநாடு மாலை 4 மணியளவில் கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

இம்மாநாட்டில் அனைத்து ஊடகவியலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கல்லூரியில் 200 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இமமாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கருத்துரை நிகழ்வு

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்துரை நிகழ்வு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவையில் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. கருத்துரை நவகாலணித்துவமும் நாடாளுமன்ற முறைமையும் எனும் தலைப்பில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொடக்கவுரையினை ச.தனுஜன் வழங்கவுள்ளதுடன் கருத்துரையினை சி.கா.செந்தில்வேல் நிகழ்த்தவுள்ளார்.

இப்பயன்தரும் கலந்துரை இடம்பெற்றதை தொடர்ந்து கலந்துரையாடலொன்றும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு சமூக, விஞ்ஞான, அறிவியல், கலை இலக்கிய ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் பிரசாரத்திற்கு அரச பேருந்துகளைப் பயன்படுத்த தடை

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் ஊழியர்களை எந்தவொரு காரணத்திற்காகவும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த அனுமதிக்க வேண்டாம் என, உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்த்தனவுக்கே அமைச்சர் இவ்வாறு அறிவுரை வழங்கியுள்ளார்.

இதன்படி இ.போ.ச. பஸ்களில் வேட்பாளர்களின் போஸ்டர்களை ஒட்டுதல் மற்றும் ஊழியர்களை பேருந்துகளில் கடமை நேரத்தில் அவ்வாறான பணிகளுக்காக அனுப்புதல் போன்றன தடை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் ஊழியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதால், பயணிகள், ஊழியர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த காலங்களில் அரசியல் கூட்டங்களுக்காக அனுப்பப்பட்ட பேருந்துகளை வண்டிகளுக்கான கட்டணம் கிடைக்கப் பெறாமையால் போக்குவரத்துச் சபைக்கு வருமானம் குறைவடைந் ததாக கூறப்படுகின்றது.

இதனால் எந்தவொரு அரசியல் ஊர்வலத்திற்கும் இ.போ.ச. பேருந்துகளை வழங்க வேண டாம் என, அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார கண்டிப்பான அறிவுரையினை வழங்கி உள்ளார்.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நிர்வாக மாவட்டங்களான யாழ்ப்பாணம், திருகோணமலை, அனுராதபுரம், கிளிநொச்சி மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் காணிப்பிணக்கு தொடர்பான விசேட மத்தியஸ்த சபைகளைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

15.05.2015 ஆம் திகதிவெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் இது விடயம் சம்பந்தமாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் தகைமைகளையுடைய நபர்களிடமிருந்து பெயர்குறித்த நியமனங்கள் கோரப்படுகின்றன.

அந்த மத்தியஸ்த சபை பிரதேசத்தில் குறிப்பிட்ட நிர்வாக மாவட் டங்களினுள் வசிக்கும் அல்லது அப்பிரதேசத்தில் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ள 35 வயதுக்கும் 70 வயதுக்குமிடையிலான நபர்கள் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட தொழில் தகைமையுள்ள ஒருவர்.

அரசாங்க ஊழியர் ஒருவராக சேவையாற்றிய அல்லது சேவையாற்றிக்கொண்டிருக்கும் ஒருவர் போன்றவர்கள் விண்ணப்பிக் கத் தகுதி உடையவர்களாகவும் என்றும் அதற்கிணங்க பொருத்தமான பெயர்குறித்த நியமனங்களை 15.05.2015 வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தை நிரப்பி கீழ்வரும் முகவரிக்கு 20 ஆம் திகதி செப்ரெம்பர் 2015 அன்று அல்லது அதற்கு முன் செயலாளர் மத்தி யஸ்த சபைகள் ஆணைக்குழு இல.80 நீதிமன்ற வீதி கொழும்பு 12 என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(08)









அண்மையில் தேசிய சமாதானப் பேரவையால் நடாத்தப்பட்ட வாக்காளர்களுக்கு நல்லாட்சி தொடர்பாக அறிவூட்டும் நிகழ்வு யாழ்.சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றபோது......

(137)

# குடாநாட்டு மக்களின் அதிக ஆதரவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே பெறும்

## ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் தெரிவிப்பு





நல்லாட்சி செய்வதாக கூறி குடாநாட்டில் நடைபெற்றுவந்த அனைத்து அபிவிருத்திகளையும் மேம்பாடுகளையும் தடுத்து நிறுத்திக்கொண்டிருக்கும் கீழ்த்தரமான அரசியல் நகர்வுகளால் தமிழ் மக்களது வாழ்வியலையும் உரிமைகளையும் முடக்கியதை தவிர வேறெதனையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நல்லாட்சி செய்வதாக கூறி அமைக்கப்பட்ட அரசிடமிருந்து பெற்றுக்கொடுத்தது கிடையாது - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா. வேலும்மயிலும் குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி தொகுதியில் நடைபெற்ற மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவிததுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

ஈ.பி.டி.பியையும் அதன் மக்கள் சேவையையும் எப்படியாவது தமிழ் மக்களிடமிருந்து தடுத்து நிறுத்தி தமிழ் மக்கள் துன்பப்படுவதை அரசியலாக்கி தமது சுகபோக அரசியலை மேமபடுத்திக்கொள்வதற்கும் பல மில்லியன்களை தமது வங்கிக் கணக்கில் சேர்த்துக்கொள்வதற்காகவும் மட்டும்தான் கடந்த அரசிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்தது.

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கலாசார சீர்கேடுகள் சமூக பிறழ்வுகள் அனைத்தையும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர். வட மாகாணத்தை தம்வசம் வைத்துள்ள கூட்டமைப்பினர். வடமாகாணத்தை ஆழுகின்ற அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ள இவர்கள் குடாநாட்டின் சூழ்நிலையை மோசமாக்கி அதன் மூலம் தமிழர்களுக்கு தொடர்ந்தும் பிரச்சினைகள் இருப்பதாக காட்டி தமது இருப்பை தக்கவைபபதற்காகவே போராடிக் கொண்டிருக்கின்றனர். தற்போது வரவுள்ள தேர்தலுக்கான தமது வாக்கு வங்கி சேகரிப்பிற்கு மறுபடியும் பிரிவினையை தூண்ட வல்ல திம்பு தீரவுத்திட்டத்தை தமிழ் மக்களிடம் கொண்டுவந்துள்ளனர். இதனால் எமது இளைய சமூகத்தினரை வன முறைகளுக்குள் தூண்டி மறுபடியும் ஒரு துன்பகரமான சூழ்நிலையை கொண்டுவரவே இவர்கள் விரும்புகின்றனர்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாளிகள் அல்லர். அவர்கள் கடந்தகாலத்தில் போராட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தமையால் தேசியம்பேசி தம்மை ஏமாற்றுபவர்களுக்கு வாக்களித்துக்கொண்டிருந்தனர். ஆனால் தற்போது அத்தகைய ஒரு சூழ்நிலை தமிழ் மக்களிடம் இல்லை. அதனால் மக்கள் தெளிவான மாறறத்திற்காக தமது வாக்குகளை வழங்க தயாராகிவிட்டனர். மாற்றங்கள் தான் எமது வாழ்வியலை மாற்றும் என்று ஒரு வரலாற்று தெளிவு தமிழ் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. தமிழ் புத்திஜீவிகள் தொடக்கம் சாதாரண மக்கள் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைபபினரது ஏமாற்று சுயநல அரசியலை ஒதுக்கிவிட தீர்மானித்துவிட்டனர். இதனால் ஈழமக்கள் ஜனநாயக கட்சிக்கு இம்முறை குடாநாட்டில் அதிக மக்களது ஆதரவு கிடைக்குமென பலதரப்பட்டவர்கள் பேசிக்கொள்கின்றனர்.

தமிழ் மக்கள் மாற்றுத் தலைமையாக தமிழ் மக்களுக்கு தேவையான அனைத்து தேவைகளையும் பூர்த்திசெய்து கொடுத்துவரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியினரது கைகளுக்கு கொடுக்க தீர்மானித்துவிட்டனர். செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நீண்டகாலம் உங்களிடம் கேட்டுவரும் மத்தியுடன் பேரம்பேசக் கூடியளவான அரசியல் பலத்தை இம்முறை வரவுள்ள தேர்தலின் மூலம் கொடுப்பீர்களானால் நிச்சயமாக நாம் உங்களது வாழ்வியலையும் உரிமைகளையும் பெற்றுத்தருவோம் என்றார்.

# தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் மொழிப்பிரச்சினையால் அவதி

## பொருத்தமான பாடசாலைக்கு இடமாற்றக் கோரிக்கை

கற்பித்தலின் போது மொழிப் பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளதாக தமிழ் மொழிமூல தகவ்ல் தொழில்நுட்ப ஆசிரியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் வழங்கப்பட்டுள்ள கல்விக் கல்லூரி டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர் நியமனத்தின் போது இந்த தமிழ் மொழிமூல தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்கள் சிங்கள மொழி பாடசாலைக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

தாம் மொழிப்பிரச்சினைக்கு உள்ளான நிலையில் கற்பித்தல் நடவடிக்கைகளை தொடர முடியாது சிரமங்களை எதிர்கொள்வதாக அனுராதபுர மாவட்ட சிங்கள மொழி பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட தமிழ்மொழிமூல ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இம்மாவட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப பாடசாலைகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருந்துவரும் நிலையில் சிங்களப் பாடசாலைகளுக்கான தமது நியமனத்தை தவிர்த்திருக்கலாமெனவும் அவரகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதில் தொடர்புபடும் அதிகாரிகள் தமது நிலைமையை புரிந்து கொண்டு பொருத்தமான இடங்களில் தமது கற்பித்தலைத் தொடர வகை செய்துதர வேண்டுமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.(அ)

# பிற்போடப்பட்டது நிர்வாகத் தெரிவு

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர ஆலய வழிபடுவோர் சங்க நிர்வாகத் தெரிவு பிற்போடப்பட்டுள்ளது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மேற்படி நிர்வாகத் தெரிவிற்கான திகதியாகிய எதிர்வரும 2ஆம் திகதி இரத்துச்செய்யப்பட்டு அத்தெரிவானது புதிய திகதியாகிய 30.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடகக்ம் பி.ப 1.00 மணி வரை யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெறும்.

இதற்கான நியமனப்பத்திர அறிவித்தல் கடிதம் அங்கத்தவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புதிய வேட்பாளர் நியமனப்பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி 2015.08.05 ஆகும். இத்திகதிக்கு முன்னர் வேட்பாளர் நியமனப்பத்திரங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எனக்கு கிடைக்கக கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே நியமனப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் மீளவும் நியமனப்பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதனை கருததிற் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தகவல்கள் அறிய விரும்பின் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## — வவுனிக்குளத்தில் —

# முறையற்ற நீர் விநியோகம் சிறுபோக செற்செய்கை பாதிப்பு



முல்லைத்தீவு, வவுனிக்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கைக்கு முறையான விதத்தில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படாமையால் சுமார் 23 ஏக்கர் நெற் செய்கை அழிவடைந்துள்ளதாக வவுனிக்குளத்தின் கீழ் சிறுபோக செய்கையை மேற கொண்ட விவசாயிகள் தெரிவிததனர். வவுனிக்குளத்தின் கீழ் இம்முறை சுமார் 2000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் இடதுகரை வாய்க்காலின் 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் வாய்க்கால்களை அண்டிய வயல் நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுமார் 23 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வவுனிக்குளம் அலுவலகம் தெரிவிக்கையில் சிறுபோக செயகைக்குத் தேவையான போதியளவு நீர் வவுனிக்குளத்தில் இருகக்கின்றது. சிறுபோக செய்கை விவசாயிகளுடன் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய நீர் விநியோகம் சீராக மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் கிளை வாய்க்கால்களுக்கு நீர் விநியோகம் செய்வதற்கு பொறுபபானவர்களின் தவறால் அல்லது சீரற்ற நீர் விநியோகத்தால் 23 ஏக்கர் நெற் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினர்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

மாற்றானும் உன்னைப்போல் சிந்திக்க வேண்டும் என நினைப்பது உன் முட்டாள் தனத்தின் முதல் அறிகுறி -அன்புவழியூர்க்கவிராயர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## என்னவொரு நடிப்புடா சாமீ!

நாங்கள் பகிரச் சொல்லிக் கேட்கும் அதிகாரங்கள் என்ன மாதிரியானவை என்பதைத் தெளிவுபடுத்தாமல், வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரே அலகுக்குள் சமஷ்டியே தீர்வு என்று தேர்தல் நேரத்தில் வெறுமனே அடித்து விடுவது, இரண்டு பக்கத்திலும் சூட்டைக் கிளப்பி விடத்தான் என்பது பலருக்கும் புரியும்.

கவனித்துப் பாருங்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பற்றிச் சிங்கள மக்களை உசுப்பேத்தும் விதமாக "இதுதாண்டா தேர்தல் சூடு" என்று அங்கே உள்ள தலைவர்கள் பட்டையைக் கிளப்புகிறார்கள்.

அதையெல்லாம் இங்கே தமிழ் மக்களுக்குத் திரும்பப் போட்டுக் காட்டி, "சமஷ்டி என்ற சொல்லைக் கேட்டாலே துள்ளிக் குதிக்கிறார்கள் பாருங்கள், இவர்களுக்கு இரண்டாந்தரக் குடிமக்களல்ல நாங்கள் என்று உணர்த்தும் விதமாக நம் ஒற்றுமையை இவர்களுக்குக் காட்ட வேண்டிய பொறுப்புத் தமிழ் வாக்காளர்கள் கைகளிலேயே இருக்கிறது" என்று இவர்களும் தேர்தல் கணகணப்பை ஏத்துகிறார்கள்.

இதுநாள்வரை இந்த சமஷ்டித் தனியலகின் சாதக பாதகங்களைப் பற்றி தென்னிலங்கைத் தலைவர்களுடன் விரிவாகவும் ரகசியமாகவும் உரையாடல்களை நடத்திவிட்டுத்தானே கடந்த ஜனவரியில் ஆட்சி மாற்றத்திற்குத் தமிழ் மக்களை வாக்களிக்கக் கோரினீர்கள்?

"மைத்திரியும் ரணிலும் சந்திரிகாவும் 2015-ல் தீர்வைக் கொண்டுவந்து விடுவதற்கு வாக்குறுதியளித்திருக்கிறார்கள். எழுத்தில் வேண்டாமா என்று சந்திரிகா அப்போது கேட்டார். உங்கள் வாய் வாக்குறுதியே போதும் என்று சொன்னோம் நாம். நல்லாட்சி அரசில் தேசிய நிறைவேற்றுச் சபை அமைத்து அதன் மூலம் தீர்வு காணப்படுவது உறுதி" என்று ஜனாதிபதித் தேர்தலின் போது சொன்னீர்களா இல்லையா?

அப்போது உங்கள் சமஷ்டித் தனியலகு கதையை அவர்கள் கேட்கவில்லையா? அல்லது நீங்கள் சொல்லாமலே அவர்கள் அதைத்தான் தருவதற்கு ஒப்புக்கொள்கிறார்கள் என்று நீங்களாக எண்ணிக் கொண்டீர்களா?

ஐக்கிய தேசியக் கட்சியும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் "ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு" என்று சொல்லியிருப்பதற்காக இப்போது கோபப்படுவது போல் நாடகம் போடும் நீங்கள், கடந்த ஜனவரியில் அவரைப் பிரதமராகக் கொண்டுவருவதற்கு ஆதரவளித்த போது இதுபற்றிக் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளவில்லையா?

அவர்களிடம் தனிப்படப் பேசும்போதும் அவர்களை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு முழுமூச்சாக வேலைசெய்யும் போதும், அவர்கள் எதைத் தருவார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளாமலேதான் ஆதரிக்கிறீர்களா?

ஏதோ இப்போதுதான் ஐ.தே.க வும் ரணிலும் கூட சமஷ்டியை ஏற்கவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு நீங்கள் அதிர்ச்சியடைவதைப் போல... என்னவொரு நடிப்புடா சாமீ!

சரி, தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டியைக் கேட்டிருக்கும் நீங்கள், அதைச் சாத்தியமாக்குவதற்குத் தேர்தலின் பின் என்னென்ன வழிமுறைகளை வைத்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்ல வேண்டுமல்லவா!

ஏனெனில், தேர்தல் முடிந்தவுடன் இதுபற்றி எதுவும் பேசாமலே, "இலங்கை அரசாங்கம் தீர்வை வைக்காமல் இழுத்தடிக்கிறது; சர்வதேசம் இதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கக் கூடாது" என்று ஒரு வீர வசனம்... அவ்வளவுதான்.

இதெல்லாம் அவர்கள் யார் யாரோ செய்ய வேண்டிய வேலை என்னும் விதமாகத் தமிழ் மக்களுக்குப் போக்குக் காட்டிவிட்டு இந்தத் தலைவர்கள் டிப்ளோமற் வீசாவில் அவரவர் குடும்பங்களைப் பார்க்கப் புறப்பட்டுப் போய்விடுவார்கள். - ஆசிரியர்

# ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பரவலாக்கல்

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைப்பிரகடனம் என்கிறார் வாசுதேவ

(கொழும்பு)

ஒற்றையாட்சிக்குள் இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போன்று மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைப் பிரகடனத்தின் முக்கிய அம்சம் என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கலை நாம் எதிர்க்கவில்லை. மாகாண சபைகளுடன் ஒற்றையாட்சிக்குள் அதிகாரத்தை பரவலாக்குவோம். அவ்வாறு அதிகாரத்தை பரவலாக்கும் போது இந்தியாவில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போன்று அதிகாரங்கள் வழங்கப்படும். இது விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணக்கப்பாடு கண்டுள்ளதோடு அதன் கொள்கைப் பிரகடனத்திலும் இது உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதிகாரத்தை பரவலாக்குவது தொடர்பாக ஐ.தே.க. விடம் நிலையான கொள்கையில்லை. சமஷ்டி முறையில் தீர்வு என்றும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்றும் மாறுபட்ட நிலைப்பாடுகளில் ஐ.தே.க.பயணிக்கின்றது.வரலாற்றுக் காலம் அதாவது சுதந்திரத்திற்கு பின்னர் ஐ.தே.க. ஆட்சிக் காலத்திலேயே தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படாது மறுக்கப்பட்டது.

பண்டா - செல்வா ஒப்பந்தத்தை அமுல்படுத்த முடியாமல் அதனை ஐ.தே.க.வே தடுத்தது. 1983 இல் யூலை இனக்கலவரத்தை ஏற்படுத்தி வடக்கு தமிழ் மக்களை அடக்குமுறைக்குள்ளாக்கி அங்குள்ள இளைஞர்களை ஆயுதப் போராட்டத்திற்கு தள்ளிவிட்டது. இவ்வாறு தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையை ஐ.தே.க.வே கட்டவிழ்த்து விட்டது.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவின் அடக்குமுறைக்கு அடிபணிந்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆட்சியை பெற்றுக் கொடுத்து தமக்கு தேவையான விதத்தில் இலங்கையில் ஆட்சியை வழி நடத்துவதே அமெரிக்காவின் திட்டமாகும். அதற்காகவே கூட்டணி மீது அமெரிக்கா அழுத்தம் ஆதரவு வழங்கச் செய்துள்ளது. மகிந்த ராஜபக்ஷ இனவாதியல்ல என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

# இனப்பிரச்சினை தீர்வுக்கு உண்மையை கண்டறியும் ஆணைக்குழு

## பிரதமர் ரணில் உறுதி

இனப்பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்கும் அதேவேளை தென்னாபிரிக்காவைப் போன்று உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவொன்றும் உருவாக்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு எதிரான அறிக்கையை ஐ.நா.மனித உரிமைகள் பேரவை சமர்ப்பிக்க இருக்கிறது. இதிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள முடியாது. அதற்கு நாம் முகம் கொடுக்க வேண்டும். கடந்த அரசாங்கம் இதனை சரிவர அணுகாத காரணத்தினாலேயே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

எமது நாட்டின் சட்ட வரையறைக்குள் உள்ளக விசாரணையொன்றை ஏற்படுத்துவது தான் எமது நோக்கம். உள்ளக விசாரணைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை இல்லை என்று கூறுவது சரிதான். குறிப்பாக மூதூர் சம்பவம் போன்றவற்றிலும் நம்பிக்கையை இழக்க நேரிட்டது. எனவே, தேசிய, சர்வதேச மட்டங்களில், நம்பிக்கையை பெற்றதாக விசாரணை அமைய வேண்டும். உள்ளக விசாரணைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நம்பிக்கையில்லை எனின் அவர்களது ஆலோசனைகளை பெற்று உணமையை கண்டறிவதற்கான குழு அமைக்கப்படும். இது தொடர்பில் கூட்டமைப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

யுத்தத்தை வெற்றி கொள்வதாக இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு கடந்த அரசாங்கம் உத்தரவாதம் வழங்கியது எனினும் அந்நாடுகளின் ஆலோசனைகளை பின்பற்றுவதாக வழங்கிய வாக்குறுதிகள் மீறப்பட்டிருந்தன. இதனாலேயே இன்று இந்த நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த அரசாங்கம் முன்னெடுத்து வந்த அபிவிருத்திப் பணிகளை ரணில் தலைமையிலான அரசாங்கம் நிறுத்திவிட்டதாக ராஜபக்ஷ அணியினர் குற்றம் சுமத்தி வருகின்றமையினை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவும் தெரிவித்துள்ளார்.

# மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக 7,000 முறைப்பாடுகள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்திற்கு எதிராக 7000 முறைப்பாடுகள் உள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். களுத்துறையில் மக்கள் முன்னிலையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிரான 7000 முறைப்பாடுகளில் 53 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. அவ்வாறு விசாரணைகள் நிறைவடைந்து முறைப்பாடுகளில் ரகர் விளையாட்டு வீரர் தாஜுடீன் கொலை சம்பந்தமானவைகளும் உள்ளடக்கப்படும் அது உட்பட விசாரணைகள் நிறைவடைந்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாரிய அளவில் வெற்றிபெறும்

## சேனவிரத்ன நம்பிக்கை

இம்முறை முழு நாட்டிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி பெரிய அளவிலான வெற்றியை பெற்றுக்கொள்ளும் என பல்மடுல்லை பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் டபிள்யூ. டி.ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை பொதுத் தேர்தலில பொது மக்களின் தொடர் கோரிக்கைகள் மகிந்த ராஜபக்ஷவிடம் கிடைத்தது. அதனால் தான் மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பு மனு வழஙகுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டது.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எங்களுக்காக இருக்கின்றார்கள் என்று நம்பிக்கையில் இருந்தோம்.

எனினும் சமீபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேவையற்ற முட்டாள்தனமான உரையை ஆற்றினார். இது எங்கள் பயணத்தை இடை நிறுத்த போடப்பட்ட குண்டு.

இதன் மூலம் ஐக்கிய தேசியக கட்சிக்கு அனுகூலமான நிலை உருவாகியது. எனினும் இந்நாட்டு மக்களிடம் நான் கூற வேண்டியது ஒன்றுதான், ஏமாற வேண்டாம். இரத்தினபுரி மாவட்டத்தில் நாடாளுமன்றத்திற்கு செல்லும் 11 பேரில் 7 பேர் கூட்டணியில் இருந்து செல்வதற்கு பெரிய வெற்றியினை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். 2015ஆம் ஆண்டில் இருந்து இதுவரையிலும் உறுப்பினர்களுக்கு இதுவரையில் ஒரு சதம் பணம் வழங்கவில்லை. 100 இலட்சம் வழங்குவதாக கூறியது மாத்திரமே.

அதனால் அபிவிருத்திகள் தடைப்பட்டுள்ளது. மகிந்தவுக்கு போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்க மாட்டேன் என ஜனாதிபதி கூறியிருந்தார். இது எங்களுக்கு பிரச்சினையாகியது. ஐக்கிய தேசியக் கட்சியின் அழுதங்களினாலே இவ்வாறு நடந்தன.

பின்னர் விருப்பமின்றி மகிந்தவுக்கு வேட்புமனு வழங்கியதாக கூறி ஜனாதிப்தி இன்னும் ஒரு குண்டு போட்டார்.

எனினும் நாங்கள் இணைந்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியே மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு பெற்றுக்கொடுத்தோம்.

மகிந்தவினால் வெற்றி பெற முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவசியமற்ற உரையை ஆற்றினார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் - சாக்கடையா?

கோமல் அன்பரசன்

**மொத்த குறையும் மக்கள் மீதுதானா? நம்மைக் கெடுத்ததில் தலைவர்களுக்குப் பங்கில்லையா என்றால், இருக்கலாம். ஆனால், அவர்கள் துணிந்து கெடுப்பதற்கும், தொடர்ந்து கெடுப்பதற்கும் இடம் கொடுத்தது நம் தவறுதானே?**

அரசியலா... அது ஒரு சாக்கடையெல்லோ... - நம்மிடம் மிகச் சரளமாகப் புழக்கத்தில் இருக்கும் சொல்லாடல் இது. அதிலும் நடுத்தர வர்க்கத்தவரிடம் இந்த எண்ணம் ஆழ வேரூன்றிக் கிடக்கிறது. ஆனால், அரசியல் இல்லாமல் இங்கே என்ன நடக்கிறது அல்லது நடந்துவிட முடியும்?

காலையில் தூங்கி எழுந்திருப்பதில் இருந்து இரவு மீண்டும் தூங்கப்போகும் வரை எதிர்கொள்கிற எல்லாவற்றிலும் ஏதோ ஒரு வகையில் அரசியல் இருக்கிறது. பொழுதுபோக்குக்காகப் பார்க்கிற திரைப்படம், தொலைக்காட்சி, படிக்கிற இதழ்கள் எல்லாவற்றின் பின்னணியிலும் அரசியல்தான்.

இப்படி நம்முடைய பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொன்றிலும் அரசி யல் ஒளிந்து கிடக்கிறது. சில இடங்களில் பட்டவர்த்தனமாகத் தெரி கிறது. மொத்தத்தில் நம் உணவை, உடையை, செயற்பாடுகளை முடிவு செய்வது அரசி யலே. நிறுத்தி, நிதானமாக யோசித்தால் இதிலுள்ள உண்மை உங்களுக்குப் புரியும்.

நம்முடைய வாழ்வை, நாம் விட்டுச் செல்லவிருக்கும் அடுத்த தலைமுறை யின் வாழ்வியலை, நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிற அரசி யலை, அது ஒரு சாக்கடை என வெகு எளிதாகக் கடந்து செல்கிறோம். இது எப்படிச் சரியாக இருக்க முடியும்? அட, அதற்காக என்ன செய்ய? எல்லாரும் வேலையை விட்டுவிட்டு, கட்சிகளில் ஐக்கியமாகி, வேட்டி கட்டிக்கொண்டு கிளம்பிடவா முடியும், கொடி ஏற்றி முழங்கிடவா முடியும் என்று நீங்கள் கேட்பது காதுகளில் விழுகிறது. அங்கேதான் பிரச்சினை.

அரசியலைப் பற்றிய நம் சிந்தனை அப்படித்தான் இருக்கிறது. ஒன்று ஒதுங்கிப் போக வேண்டும். இல்லையென்றால் அதில் மூழ்கி முத்து எடுக்க வேண்டும். நம் தலையெழுத்தை நிர்ணயிக்கும் அரசியலைப் பற்றிப் பேசவே பயப்படும் மனநிலைக்கு நாம் வந்த இடம்தான், அரசியல் அவலமானதன் ஆரம்பம். நமக்கேன் அரசியல் என்று நாம் ஒதுங்கியதே நிலைமை இத்தனை மோசமானதன் தொடக்கம்.

**இதற்கு என்னதான் தீர்வு? யாராவது வானத்திலிருந்து குதித்து வருவார்கள். அவர்கள் ஏதாவது ஆச்சரியங்களை நிகழ்த்துவார்கள். அதை வாய் பிளந்து பார்த்து, கை தட்டி மகிழ்வோம் என்ற எண்ணத்திலிருந்து முதலில் நாம் ஒவ்வொருவரும் வெளியே வர வேண்டும். அணு, அணுவாக நம்மை இயக்குவது அரசியலே என்பதிலும் அதனைத் தீர்மானிப்பதும் வழிநடத்துவதும் நாமே என்பதிலும் நமக்குத் தெளிவு பிறக்க வேண்டும்.**

அதைப் பற்றிப் பேசவும் அதில் இயங்கவும் யாரோ சிலர் இருக்கிறார்கள் என்ற எண்ணமே இங்கே கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது. முதலில் ஒதுங்கியதால், அரசியல்வாதிகள் சகல அதிகாரம் கொண்ட தனி சமூகமானார்கள்.

பிறகு அவர்களைப் பார்ப்பதற்கே தயங்குவதற்கும், எண்ணிப் பயப்படும் அளவுக்கும் சூழல் மாறியது. கடைசியாக அரசியல்வாதி நம்மில் ஒருவர், நம்மால் தேர்ந்தெடுக்கப்படுபவர் என்று சிந்திப்பதற்கே அஞ்சி, அவர்களைத் தாழ்ந்து, பணிந்து தொழும் நிலைக்கு வந்து நிற்கிறோம்.

### தேர்தல் முடிந்த பின்னர் போகிறார் அரசியல்வாதி...



மேலை நாடுகள் பலவற்றில் வேலை அல்லது தொழில் செய்து கொண்டே அரசியலிலும் இருக்கிறார்கள். அங்கே யாருக்கும் இது முழு நேரத் தொழில் இல்லை. அதனால், பணத்தைக் குவிப்பதற்கான வழிமுறையாகவும் அரசியலைப் பார்ப்பதில்லை.

அமெரிக்காவில் இரண்டாவது முறை அதிபரான ஒபாமா, அடுத்த ஆண்டு பதவிக் காலம் முடிந்ததும் பார்ப்பதற்கான வேலையை இப்போதே தேடிக் கொண்டி ருக்கிறார். சரி யான பணி அமையாவிட்டால், அதிபராவதற்கு முன்பு பார்த்த தன்னார்வத் தொண்டு நிறுவன ஆலோசகர் பணியை மீண்டும் தொடரலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பதாக ஒபாமா கூறியிருக்கிறார். இது அங்கே புதிதல்ல. ஏனெனில், அமெரிக்கச் சட்டப்படி இரு முறைக்கு மேல் ஒரே நபர் அதிபராக முடியாது.

ஏற்கனவே அதிபராக இருந்த ஜிம்மி கார்ட்டர், தம்முடைய பூர்வீக நிலக்கடலை விவசாயத்துக்குத் திரும்பி, அதில் கிடைக்கும் வருவாய் மூலம் மக்களுக்கும் சேவை செய்கிறார். சில நிறுவனங்களுக்கு ஆலோசகராக வேலை பார்க்கும் கிளிண்டன் அறக்கட்டளையும் நடத்துகிறார். நம் தலைவர்களைப் பற்றி நம்மால் இப்படி கற்பனை செய்து பார்க்க முடியுமா? தலைவர்களை விடுங்கள். முன்னாள் கவுன்சிலர்கள் குறித்தாவது நினைக்க இயலுமா?

எனவே, வளம் கொழிக்கும் தொழில் என்ற நிலையிலிருந்து நம் ஊர் அரசியலை மீட்டெடுக்க வேண்டிய அவசிய, அவசரம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

ஒன்றிரண்டு ஆண்டுகளில் பதவி, அதன் பிறகு கார், பங்களா, சொத்து, சுகம், ஊரே மிரளும் அதிகா ரம் - இவற்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இளைஞர்களும் இன்ன பிறரும் அரசியலுக்கு வருகிறார்கள்.

இதனால், அரசியலுக்கு வருவதற்குத் தேவையான தகுதிகளும் அடியோடு மாறிவிட்டன. சித்தாந்த அரசியல் செத்துப் போய், தனி நபர் துதி பாட லும், தறுதலைச் செயல்களும் தூக்கலானதே அரசியலைப் பற்றிய அருவெறுப்புக்கு முக்கிய காரணிகளாகிவிட்டன. தவறானவர்களின் புகலி டம் என்பதோடன்றி, சரியானவர்கள் நுழைந்தாலும் கெட்டுப் போகாமல் அரசியலில் குப்பை கொட்ட முடியாது என்ற எண்ணமும் அழுத்தத்திருத்தமாகப் பதிந்திருக்கிறது.

அன்றைய அரசியல்வாதிகள் மீதும் குற்றச்சாட்டுகள் இருந்தன. அதையெல்லாம் தாண்டி குறைந்தபட்ச தவறு, அதிகபட்ச அக்கறை, தார்மிக உணர்வு இருந்தது. மக்கள் தவறாக நினைப்பார்களே என்ற பயம் இருந்தது. அரசியலில் பணம் குவித்து, பகட்டாக இருப்பவர்களை அன்றைக்கு மக்கள் வெறுத்தார்கள். பெரும்பாலானோர் மனசாட்சிக்குப் பயந்து நடந்தார்கள்.

அடுத்தவனைக் கெடுத்தால், அநியாயம் செய்தால், அன்றே இல்லாவிட்டாலும் அடுத்த நாள் "அதற்கான பலனை அனுபவிக்க நேரிடும் என்று அதிகம் பேர் அஞ்சினார்கள். தலைவர்கள், தங்களைவிட மேலானவர்களாக, உதாரண புருஷர்களாக, நாட்டுக்காகத் தியாகம் செய்தவர்களாக இருக்க வேண்டும் என விரும்பினார்கள். அதனால், தலைவர்களும் மக்களைக் கண்டு பயந்தார்கள்.

சிறு வயதில் பார்த்த காட்சிகள் இன்னும் அப்படியே மனக்கண்ணில் நிற்கின்றன. மதுக் கடைக்குச் செல்பவர்கள் பயந்து, அக்கம்பக்கம் பார்த்து, யாராவது தம்மைப் பார்த்து விடுவார்களோ என்று அஞ்சிச் செல்வார்கள்.

இன்னும் ஒருபடி மேலாக, தலையில் முக்காடு போட்டு முகத்தை மூடிக்கொண்டு சாராயக் கடைக்குப் போனவர்களை எங்கள் கிராமத்தில் பார்த்திருக்கிறேன். உறவையோ, நட்பையோ மதுக் கடையில்
பார்ப்பதைக் கேவலமாகப் பார்த்த சமூகம், குடும்பம், மனிதர்கள் அன்றைக்கு இருந்தார்கள். இப்போது நிலைமை என்ன என்பதை மனதில் ஓட்டிப் பாருங்கள். மதுவும் மனிதனும் என்பது ஒரு குறி யீடுதான். ஏறத்தாழ எல்லா மதிப்பீடுகளும் இதே கதிக்குதான் ஆளாகியிருக்கின்றன. தவறு கள் எல்லாமே தவறுகள் இல்லை என்ற புதிய வாழ்வியல் சூத்திரத்தை நமக்கு வசதியாக உருவாக்கி வைத்திருக்கிறோம். நம்முடைய தலைவர்களும் அப்படியே இருக்கிறார்கள். மக்கள் எப்படியோ? அப்படித்தான் தலைவர்கள் உருவாகி வருவார்கள் என்று சும்மாவா சொல்லி வைத்திருக்கிறார்கள்.

தேன் எடுக்கிறவன் கொஞ்சமாக நக்கத்தான் செய்வான் என்று நம் தலைவர்கள் நியாயம் கற்பிக்கிறார்கள். மக்களுக்கு கொடுத்ததை நாங்கள் திரும்ப எடுக்க வேண்டாமா என்கிறார்கள். அடுத்த முறை கொடுப்பதற்காகவே எடுத்து வைக்கிறோம் என்றும் சொல்கிறார்கள். நாமும் அதனைச் சரியென்று வழிமொழிபவர்களாக இருக்கிறோம்.

மொத்த குறையும் மக்கள் மீதுதானா? நம்மைக் கெடுத்ததில் தலைவர்களுக்குப் பங்கில்லையா என்றால், இருக்கலாம். ஆனால், அவர்கள் துணிந்து கெடுப்பதற்கும், தொடர்ந்து கெடுப்பதற்கும் இடம் கொடுத்தது நம் தவறுதானே?

எல்லாம் சரி - இதற்கு என்னதான் தீர்வு? யாராவது வானத்திலிருந்து குதித்து வருவார்கள். அவர்கள் ஏதாவது ஆச்சரியங்களை நிகழ்த்துவார்கள். அதை வாய் பிளந்து பார்த்து, கை தட்டி மகிழ்வோம் என்ற எண்ணத்திலிருந்து முதலில் நாம் ஒவ்வொருவரும் வெளியே வர வேண்டும். அணு,அணுவாக நம்மை இயக்குவது அரசியலே என்பதிலும் அதனைத் தீர்மானிப்பதும் வழிநடத்துவதும் நாமே என்பதிலும் நமக்குத் தெளிவு பிறக்க வேண்டும்.

ஆரோக்கியமான அரசியலைப் பற்றிச் சிந்திக்காத, ஆர்வம் காட்டாத மக்களோ, தேசமோ உருப்பட்டதில்லை என்று வரலாறு நமக்குச் சொல்லித் தரும் பாடத்தை மனதில் இருத்த வேண்டும். நல்ல சிந்தனை, நல்ல எண்ணங்களுக்கு வலிமை உண்டு. யாரோ ஒரு தனி மனிதனின் நல்ல எண்ணமே செயல் வடிவம் பெறுகிறபோது, நூறு, ஆயிரம், பத்தாயிரம், இலட்சம் பேர் என ஒரு சமூகமே நல்லனவற்றைச் சிந்திக்கத் தொடங்கிவிட்டால் அதற்கு எவ்வளவு ஆற்றல் இருக்கும்.

நல்ல அரசியல் அல்லது அரசியலில் நல்லவர்கள் என்ற அந்த எண்ணம் செயலாக, நடைமுறையாக மாறிவிடுமல்லவா? ஊருக்குச் சாக்கடை அவசியம். அதற்காக ஒட்டுமொத்த ஊரும் சாக்கடையாவதற்கு விடப்போகிறோமா என்பது நம் சிந்தனையில், செயலில்தான் இருக்கிறது.

# நிதிமோசடி தவிர்ப்பு பொலிஸாரின் விசாரணைகள் தொடரும்

## - ரணில் திட்டவட்டம் -



நிதி மோசடி தவிர்ப்பு பொலிஸ் பிரிவின் விசாரணைகள் தொடரும் என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இந்த பிரிவினால் தற்போது 20 உயர் நிலை அரசியல்வாதிகள் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தநிலையில் எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட பின்னர் இந்த விசார ணைகள் முன்னெடுக்கப்படும்

குற்றமிழைத்த அரசியல்வாதிக ளுக்கு எதிராக தேர்தல் காலத்தில் நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலை உள்ளது.

இதேவேளை நல்லாட்சிக்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் சுதந்திர ஊடக முறை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத ஆட்கடத்தல் உரிய நடவடிக்கை இல்லை

## இலங்கையை சாடுகிறது அமெரிக்கா

இலங்கையில் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக் கப்படுவதில்லை என அமெ ரிக்கா தெரிவித்துள்ளது.

ஆட்கடத்தல்களில் சிக்கு வோரை பாதுகாப்பது தொடர் பில் இலங்கையில் வரையறுக் கப்பட்ட மாற்றமே ஏற்பட்டுள்ளது என சிவிலியன் பாதுகாப்பு, ஜன நாயகம் மற்றும் மனித உரிமை களுக்கான அமெரிக்க துணைச் செயலாளர் சாரா ஸ்வெல் தெரி வித்துள்ளார்.

பொலிஸாரும் ஏனைய அதி காரிகளும் இலஞ்சம் பெற்றுக் கொண்டு சட்டவிரோத ஆட் கடத்தல்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக குற்றம் சுமத் தப்பட்டுள்ளது

பல தொழில் முகவர் நிறுவ னங்கள் அரசியல் ரீதியான தொடர்புகளைப். பேணி வரு கின்றன.


போலியான ஆவணங்ளைத் தயாரித்து சட்டவிரோதமான முறையில் நபர்கள் வெளிநாடு களுக்கு அனுப்பி வைக்கப்படு கின்றனர்.

சட்டவிரோத ஆட்கடத்தல் நட வடிக்கைகளினால் பாதிக் கப்படுவோரின் நலன்களை பேணுவதற்கோ அவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கோ இலங்கையில் எவ்வதி திட் டங்களும் முன்னெடுக்கப்பட வில்லை என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.



# ஐக்கிய தேசியக்கட்சியில் தனித்தீர்மானமெடுக்கும் ரணில்

## - அனுரபிரியதர்சன யாப்பா தெரிவிப்பு -



ஐக்கிய தேசியக் கட்சியில், கட்சியின் தலைவர் ரணில் விக் கிரமசிங்க தனித்து தீர்மானங் களை எடுத்து வருவதாக சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித் துள்ளார்.

பல இலட்சக்கணக்கான அடி மட்ட கட்சி உறுப்பினர்கள் அம் பாந்தோட்டை மெதமுலனவிற்கு சென்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அரசிய லுக்கு வருமாறு கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கை கட்சியி லும் முன்வைக்கப்பட்டது. இந் தக் கோரிக்கையின் அடிப்ப டையிலேயே எமது மத்திய செயற்குழு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்பன கீழ் மட்ட உறுப்பினர்களின் கோரிக்கை களுக்கு செவிமடுக்கும் பொறி முறைமை ஒன்றை பின்பற்றி வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியில் அவ்வாறான ஓர் நிலைமை கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சியில் அடிமட்ட அல்லது கீழ் நிலை உறுப்பினர்களின் யோசனைகள் மத்திய செயற்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுகள் மட்டுமே மத்திய செயற் குழு வினால் அமுல்படுத்தப்படுகின் றன என அனுர பிரியதர்சன யாப்பா செய்தியாளர் சந்திப் பொன்றில் தெரிவித்துள்ளார்.

# கடந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் 192 பேருக்கு உயர்தர சித்தியில்லை

## - கூறுகின்றார் சம்பிக்க ரணவக்க -

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றில் அங்கம் வகித்த .192 உறுப் பினர்கள் உயர்தரப் பரீட்சை யில் சித்தியடையவில்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்கத் தெரிவித்துள்ளார்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் 94 பேர் கல் விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையிலும் சித்திய டையவில்லை.

கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் சாதாரண தரம் ஆகிய பரீட்சைகளில் கூட சித்தியடையர்த அரசியல் வாதிகள் நாடாளுமன்றிற்கு தெரிவாகி, அமைச்சரவையில் அங்கம் வகிப்பதனால் அதிகா ரிகள் இலகுவில் ஊழல் மோசடிகளை மேற்கொள்ள முடிகின்றது.

சீனா போன்ற நாடுகளில் கட்சிக்கு ஆதரவாகச் செயற் படும் நபர்களை விடவும், பொறியியலாளர்கள், முகா மையாளர்கள், பிரதமர்களாக நியமிக்கப்பட வேண்டுமென 1982 ஆம் ஆண்டு முதல் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஐந்து ஆண்டுக ளில் பாரியளவில் அபிவிருத்தி யினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித் துள்ளார்.

# மகிந்தவின் காலடியில் ஜனகபண்டார தென்னக்கோன்



(மாத்தளை)

மாத்தளையில் நடந்த ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் தேர்தல் பரப்புரைக் கூட் டத்தில், முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக் கோன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவின் காலில் விழுந்து வணங்கிய சம்பவம் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் உள்ள நா-உலவில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த கூட்டத்திலேயே, அண்மையில் பதவி விலகிய அமைச்சர் ஜனக பண்டார தென் னக்கோன், கூட்ட மேடையில் மகிந்த ராஜபக்சவின் காலில் விழுந்து வணங்கினார்.

கூட்டத்தில் உரையாற்ற முற் பட்ட அவர், தொண்டை கட்டிப் போனதால், உரையாற்ற முடி யாமல் சிரமப்பட்டார்.

சற்று நேரமே உரையாற்றிய அவர், தனது தந்தை, சகோதரர் ஆகியோருடன் அரசியலுக்கு வந்த மகிந்த ராஜபக்சவுக்கு வாயால் நன்றி கூறுவதை விட காலில் விழுந்து வணங்குவதே பொருத்தம் என்று கூறிக் கொண்டு அவரது காலில் விழுந்தார்.

அவர் காலில் விழப்போ வதை அறிந்திருந்த போதிலும் தடுக்காமல் ஆசனத்தில் அமர்ந்த படி இரசித்துக் கொண்டிருந்தார் மகிந்த ராஜபக்ஷ

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியான பின்னர், மகிந்த ராஜபக்சவை விமர்சித்து, செய்தி யாளர்கள் முன்பாக அழுது கண் ணீர் விட்டவர் ஜனக பண்டார தென்னக்கோன்.

அமைச்சர் பதவியில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமையே விலகிய அவர், மீண்டும் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்டிருக்கிறார்.

அத்துடன், மகிந்த ராஜபக்ஷ தொடர்பாக மைத்திரிபால சிறி சேன அண்மையில் நிகழ்த்திய உரையையும் அவர் கட்டமாக விமர்சித்திருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

# தற்காப்புக்கலை பயின்றோரே மகிந்தவை பார்க்கச் செல்லலாம்

## - பிரதியமைச்சர் துனேஸ் கன்கந்த கிண்டல் -

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பார்வையிடச் செல்லும் அவரது ஆதரவாளரகள தற்காப்புக் கலை பயின்றிருக்க வேண்டுமென பிரதி அமைச்சர் துனேஸ் கன்கந்த தெரிவித்துள் ளார்.

தொலைக்காட்சி அலைவரி சைகளில் தற்போது சண்டைக் காட்சிகள் நிறைந்த ஓரங்க நாடக மொன்று காட்சிப்படுத்தப்படு கின்றது.

மகிந்தவுடன் குங்பூ என்ற நாடகமே இவ்வாறு காட்சிப்படுத் தப்படுகின்றது. இந்த நாடகம் அக்குரஸ்ஸ பகுதியில் காட்சி யாக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற மஹாராஜா, தன்னை பார்வையிட வரும் அடிமைகளை கை கால்களை நீட்டி தாக்கும் காட்சிகள் சிறந்த முறையில் ஒளிப்பதிவு செய் யப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் எவரேனும் மகிந்தவை பார்க்கச் சென்றால் எட்ட நின்றே பார் வையிட வேண்டும்.

அல்லது தற்காப்புக் கலை களை கற்றிருக்க வேண்டுமென பிரதி அமைச்சர் துனேஸ் கனகந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன் றில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




(ஈ.பி.டி.பி. வலிகாமம் கிழக்கு இணைப்பாளர்)



X

2

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)





# வாழ்வின் எழுச்சி முதலீட்டு அபிவிருத்தி யாழ்.மாவட்டத்திற்கு 40 மில்லியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு இம்முறை வாழ்வின் எழுச்சி முதலீட்டு அபிவிருத்தித் திட்டத்திற்கென நாற்பது மில்லியன் ரூபா வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மாவட்டத்திலுள்ள சகல பிரேதச செயலக பிரிவுகளினூடாகவும் மக்களினால் முன்மொழியப்பட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மேற்படி 40 மில்லியன் ரூபா மூலம் பாதை புனரமைப்பு, இணைப்பு வீதிகளை அமைத்தல், முன் பள்ளிகளை மேம்படுத்துதல், சுகாதாரம் சம்பந்தமான மேமபாடு, மீனவர் ஓய்வு மண்டபம் அமைத்தல், பாடசாலைகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல், பயிற்சி வழங்கல், போதைப் பொருளுககு அடிமையாதல் தொடர்பான விழிப்புணர்வு, மீன் ஏலவிற்பனை மண்டபம் அமைத்தல், அறநெறி மற்றும் ஆன்மீக ஆராய்ச்சிமையம் அமைத்தல், பெண் தலைமைத்துவ குடும்ப பெண்களுக்கு தும்பு தரம் பிரித்தல் பெறுமதி பார்த்தல் தொடர்பான பயிற்சிநெறி வழங்கல் போன்ற மக்களால் முன்மொழியப்பட்ட திட்டங்களை மாவட்டத்தின் பதினைந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் எனும் திட்டத்திற்கென பதினொரு மில்லியன் ரூபா மற்றும் பின்தங்கிய கிராமங்களின் ஆரம்ப சுகாதார நிலையங்களினை மேம்படுத்துவதற்கென ஒரு மில்லியன ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் இத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

# புதிய நிர்வாகம் பதவியேற்பு விழா

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகத்தின் பதவியேற்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.59 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபை மண்டபத்தில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பொ.பாலகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வுக்கு பிரதமவிருந்தினர்களாக லயன்ஸ் கழக முன்னாள் ஆளுநர் லயன் எஸ்.ராகவன், லயன் சீமாட்டி ரஞ்சினி, சிறப்பு விருந்தினர்களாக நீர்கொழும்பு கோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டல் நிர்வாக இயக்குநர் லயன் தேவா பீற்றர் லயன் சீமாட்டி ஜெசிந்தா கலந்துகொள்வர்.

2015/2016 ஆம் ஆண்டுக்குரிய புதிய தலைவராக சுன்னாகம் பீப்பிள் லீஸிங் கம்பெனி உத்தியோகத்தர் லயன் ந.தயாளரூபன், செயலாளராக வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன்.சி.ஹரிகரன், பொருளாளராக சமூகசேவகா லயன் செ.மகாதேவன், அங்கத்துவப் பணிப்பாளராக வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் த.தேவராஜன், நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளராக தொழிலதிபர் லயன் ந.சண்முகவேல், உபதலைவர்களாக ஹெல்த் லங்கா நிறுவன மாகாண நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் லயன் ஆர்.சிவநாயகம், யூனியன் வங்கி உத்தியோகத்தர் லயன் யோ.புருஷோத்தமன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன், சட்டத்தரணி எஸ்.பி.சிவஞானம், சட்டத்தரணி எஸ்.சுந்தரலிங்கம், வைத்தியகலாநிதி எஸ்.பேரின்நாயகம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் லயன் ம.செல்வஸ்தான், இலங்கை வங்கி முகாமையானர் லயன் பொ.பாலகுமார், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுற வுச் சங்கத் தலைவர் லயன் அ.குமாரவேல், ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் லயன் மா.இராம லிங்கம், சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி உத்தி யோகத்தர் லயன் அ.சிவகுந்தன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் லயன் சி.கஜன் ஆகியோர் பதவியேற்க உள்ளனர்.

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலை விவசாயபீடத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு (வெள்ளிவிழா) நிறைவையொட்டி விவசாயபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி வைத்தியசாலைப் பிரிவின் அனுசரணையில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை இரத்ததான நிகழ்வொன்று இடம்பெற உள்ளது.




# உலகக்கிண்ண கால்பந்து - 2018

## சிக்கலுக்குள் ஸ்பெயின், இத்தாலி

(செயின்ட் பீட்டர்ஸ்பேர்க்)

உலகக்கோப்பை கால்பந்து போட்டி 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற இருக்கிறது. இதற்கான தகுதிச் சுற்று அட்டவணை சமீபத்தில் வெளியிடப்பட்டது. பொதுவாக தகுதிச் சுற்று ஐரோப்பியா, ஆசியா, ஆபிரிக்கா வடக்கு மற்றும் மத்திய அமெரிக்கா, ஓசேனியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இடையே நடைபெறும். இந்தப்போட்டிகளின் முடிவில் உலகக்கோப்பைக்கான அணிகள் தகுதி பெறும்.

அதன்படி ஐரோப்பியாக் கண்டத்தில் உள்ள 52 நாடுகள் தகுதிச்சுற்றில் கலந்து கொள்ள உள்ளன. இந்த அணிகள் ஏ முதல் ஐ வரை 9 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

சி பிரிவில் பலம் வாய்ந்த ஸ்பெயின், இத்தாலி அணிகள் இடம் பெற்றுள்ளன. இதனால் இரண்டு அணிகளில் ஏதாவது ஒரு அணிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த அணிகளுடன் அல்பேனியா, இஸ்ரேல், மெசிடோனியா, லீக்டன்ஸ்டைன் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

பிபா விதிமுறைப்படி இந்த 9 பிரிவுகளில் முதல் இடத்தைப் பிடிக்கும் அணிகள் உலகக் கோப்பை போட்டியில் இடம் பிடிக்கும். இரண்டாம் இடம் பிடிக்கும் அணிகளில் சிறந்த 8 அணிகள் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறும். அந்த 8 அணிகளும் நான்கு பிரிவாக பிரிக்கப்படும். இதில் வெற்றிபெறும் நான்கு அணிகள் தகுதிச்சுற்றுக்கு முன்னேறும்.

இதனால் இத்தாலி அல்லது ஸ்பெயின் தோல்வியடைந்த அணிகளில் மிகச்சிறந்த 8 இடத்திற்குள் வரவேண்டும். அதன்பின் 2 ஆவது சுற்றில் வெற்றி பெற வேண்டும். 2 ஆவது சுற்றுக்கு முன்னேற முடியாமல் போனால் முன்னாள் உலகக்கோப்பை சம்பியன்களான இந்த இரண்டு அணிகளில் ஒன்று அடுத்த உலகக்கோப்பையில் விளையாட முடியாமல் போகலாம்.

போட்டியை நடாத்தும் ரஷ்யா நேரடியாக உலகக்கோப்பைக்கு தகுதி பெற்றுள்ளது. தகுதிச் சுற்று செப்ரெம்பர் மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரை நடைபெறும்.

# தொடர்ந்தும் முதலிடத்தில்



(மட்ரிட்)


ரென்னிஸ் உலகத் தரவரிசையில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார்.

பெண்கள் ரென்னிஸ் அசோசியேசன்ஸ் நேற்று தரவரிசையை வெளியிட்டது. இதில் 13191 புள்ளிகளுடன் செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். செரீனா இந்த வருடத்தில் இதுவரை நடைபெற்றுள்ள மூன்று கிராண்ட்ஸ்லாம் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

விம்பிள்டன் அரையிறுதிப் போட்டியில் செரீனாவிடம் தோல்வியடைந்த மரியா ஷரபோவா 2ஆவது இடத்தில் உள்ளார். அதன்பின் சிமோனா ஹாலேப், பெட்ரா குவிடோவா, கரோலின் வோஸ்னியாக்கி, அனா இவானோவிக், அக்னியேஷ்கா ரத்வன்ஸ்கா, லூசி சபரோவா, கார்பின் முகுருசா, கார்லா சுவாரஸ் நவரோ ஆகியோர் 3ஆம் இடத்திலி ருந்து 10ஆவது இடம் வரை பெற்றுள்ளனர்.

# இஸ்தான்புல் ரென்னிஸ் தொடர்

## உக்ரைன் வீராங்கனை சம்பியன்



(இஸ்தான்புல்)

இஸ்தான்புல் ரென்னிஸ் போட்டியில் உக்ரைன் வீராங்கனை லெசியா சுரென்கோ சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் பெண்களுக்கான உலக ரென்னிஸ் அசோசியேசன் சார்பில் இஸ்தான்புல் கோப்பைக்கான போட்டி நடைபெற்று வந்தது.

இதன் இறுதிப்போட்டியில் உக்ரைன் வீராங்கனை லெசியா சுரென்கோ போலந்து நாட்டின் ரத்வன்ஸ்காவை எதிர் கொண்டார். இதில சுரென் கோ 7-5, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டம் வென்றார். முதல் செட்டில் ரத்வன்ஸ்கா கடும் நெருக்கடி கொடுததார். ஆனால், 2 ஆவது செட்டில் விரைவில் சரணடைந்தார்.

உலக ரென்னிஸ் அசோசியேசன் நடாத்தும் ஒரு தொடர் போட்டியில் லெசியா சுரென்கோ சம்பியன் பட்டம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

ஆண்கள் பிரிவில் குரோசியன் ஏடிபி ஓப்பனை அவுஸ்ரேலியாவின் இளம் வீரர் டொமினிக தியெம் சம்பியன் பட்டம் வென்றார். இவர் போர்த்துக்கல் வீரரை 6-4, 6-1 என வீழ்த்தினார்.


# சானியா, மலிக் சவாலை ஏற்று நடனமாடிய யுவி

சானியா மற்றும் சோகைப் மலிக்கின் நடனத்தை கிண்டல் செய்ததை அடுத்து, அவர்கள் இருவரும் விடுத்த சவாலை ஏற்று இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் நடனமாடி அசத்தியுள்ளார்.

சமீபத்தில் விம்பிள்டன் பட்டம் வென்ற சானியாவும், கிரிக்கெட்டில் இலங்கையை புரட்டி எடுத்துக்கொண்டிருக்கும் சோகைப மலிக் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினரும் இணைந்து கொழும்பில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். அந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக டப்மாஷ் மூலம் இது பார்ட்டிக்கான நேரம் எனும் பொருள்படும்படி ஒரு பாடலுக்கு நடனம் ஆடியும் மகிழ்ந்தனர்.

மேலும் அந்த சிறிய வீடியோவை தங்களது டுவிட்டர் பக்கத்திலும் பகிர்ந்தனர். இதைப் பார்த்த யுவராஜ் சிங், 'நீங்கள் இருவரும் அற்புதமான விளையாட்டு வீரர்கள். ஆனால், நடனத்தில் ரொம்ப மோசம்' என தனது டுவிட்டர் பக்கத்தில் கிண்டல் செய்திருந்தார். இதனை அடுத்து சானியாவும், சோகைப் மலிக்கும் உங்கள் நடனத்திறமையை காட்டுங்கள் பார்க்கலாம் என யுவராஜிற்கு சவால் வீடுத்திருந்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட யுவராஜ் செல்பி போன்று வெல்பி (Velfie) எனப்படும் வீடியோவில் அட்டகாசமாக நடனமாடி டுவிட்டரில் வெளியிட்டுள்ளார். மேலும் எப்படி நடனம் ஆடவேண்டும் எனப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் ஆலோசனை கூறியுள்ளார்.



நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



யோகேஸ்வரி பற்குணராஜா

(யாழ்.மாநகர முன்னாள் முதல்வர்)



X 5

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# நீண்ட தொடரில் பங்கேற்க இந்தியா வரும் தென்னாபிரிக்கா

## போட்டி அட்டவணையும் வெளியீடு

(டில்லி)

இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

சுமார் 72 நாட்களுக்கு இந்தியாவில் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள தென்னாபிரிக்கா 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர், 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் மற்றும் இருபது ஓவர் போட்டி மூன்றிலும் விளையாடவுள்ளது.

அதன்படி இப் போட்டித் தொடருக்கான அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை இணைந்து வெளியிட்டுள்ளன.

அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலும் முதலில் நடைபெறவுள்ள இருபது ஓவர் போட்டிகள் ஒக்டோபர் 2 ஆம் திகதி தர்மசாலாவிலும் ஒக்ரோபர் 5 ஆம் திகதி கட்டாக்கிலும் ஒக்ரோபர் 8ஆம் திகதி கொல்கத்தாவிலும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 11 ஆம் திகதி கான்பூரிலும் 14 ஆம் திகதி இந்தூரிலும். 18 ஆம் திகதி ராஜ்கோட்டிலும், 22 ஆம் திகதி சென்னையிலும் 25 ஆம் திகதி மும்பையிலும் ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நவம்பர் 5 ஆம் திகதி ஆரம்பித்து 9 ஆம் திகதி வரையில் மொகாலியிலும் 2 ஆவது டெஸ்ட் போட்டி (நவ 14 - 18), நாக்பூரிலும் 3 ஆவது டெஸ்ட் போட்டி (நவ 25 - 29) மற்றும் 4 ஆவது டெஸ்ட் போட்டி டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பித்து 7 ஆம் திகதி வரையில் டில்லியிலும் நடைபெறும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஷஷ் 3 ஆவது டெஸ்ட் இன்று

மைக்கல் கிளார்க் தலைமையிலான அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் கொண்ட ஆஷஷ் தொடரில் முதல் போட்டியில் இங்கிலாந்து 169 ஓட்டங்களில் வெற்றி பெற்றது. 2 ஆவது டெஸ்டில் அவுஸ்ரேலியா 405 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து - அவுஸ்ரேலியா அணிகள் மோதும 3 ஆவது ஆஷஷ் டெஸ்ட் பர்மிங்காமில் உள்ள எட்ஜ் பஸ்டன் மைதானத்தில் இன்று தொடங்குகிறது. 2ஆவது டெஸ்டில் ஏற்பட்ட மோசமான தோல்விக்கு இங்கிலாந்து பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப்போட்டிக்காக இங்கிலாந்து அணியில் பேர்ஸ்டோவ் சேர்க்கப்பட்டுள்ளார். கரி பலனஸ் நீக்கப்பட்டுளார்.

## கலைவாணி உதைபந்து சுற்று

# இறுதிக்கு முன்னேறியது பொம்மர்ஸ்



(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் அணிக்கு 9 பேர் கொண்ட வகையில் நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றில் இறுதிப் போட்டிக்கு வதிரி பொம்மர்ஸ் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் நடந்த இறுதி அரையிறுதி ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதிநேர முடிவு வரை இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறாது தமது பலத்தை சமமாக நிலை நிறுத்திக்கொண்டன. ஆனாலும் பிற்பாதி ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் ஒரு கோலினை தனது அணிக்கு பெற்றுக் கொடுத்து ஆட்டத்தை முடிவு செய்ததன் மூலம், பொம்மர்ஸ் சுற்றுத் தொடரின் இறுதிக்கு தெரிவாகியுள்ளது.

இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தச்சுற்றுத் தொடரில் இறுதிப் போட்டியில் வடமராட்சியின் முன்னணி அணிகளான கம்பர்மலை யங்கம்பன்ஸ் மற்றும் வதிரி பொம்மர்ஸ் அணிகள் மோதவுள்ளன.

## வடமராட்சி வடக்கு பிரதேச செயலக விளையாட்டு போட்டி முடிவுகள்


(பருத்தித்துறை)

பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) 2015 ஆம் ஆண்டுக்கான பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான குழுப் போட்டி, தடகளப் போட்டிகள், இறுதிப் போட்டியும் நிறைவு நிகழ்வும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ் விளையாட்டு விழாவில முதல் மூன்று இடங்களைப் பெற்ற கழகங்கள் பின்வருமாறு முதலாமிடம் பருத்தித்துறை முனை சென் தோமஸ் விளையாட்டுக் கழகம்(64 புள்ளிகள்), இரண்டாமிடம் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம்(44 புள்ளிகள்), மூன்றாமிடம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் (20 புள்ளிகள்)

இப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணியினர், தனி நபர்கள் யாழ்.மாவட்ட பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வடமாகாண பாடசாலை மட்ட சதுரங்க போட்டி முடிவுகள்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது, 15 வயது ஆண்கள், பெண்கள் (குழுப் போட்டி) சதுரங்கச் சுற்றுப்போட்டி அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வடமாகாண உடற்கல்வி அமைச்சின் உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியின் பரிசளிப்பு விழாவிற்கு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தெய்வேந்திரராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். இப்போட்டியின் முடிவுகள் பின் வருமாறு

15 வயதின் கீழ் ஆண்கள்

முதலாமிடம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

15 வயதுப்பிரிவு பெண்கள

முதலாமிடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட்சாலை, இரண்டாமிடம் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம் அளவெட்டி அருணோதயக் கல்லூரி

19 வயதுப் பிரிவு ஆண்கள

முதலாமிடம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மூன்றாமிடம் கொக்குவில் இந்துக்கல்லூரி

19 வயதுப் பிரிவு பெண்கள

முதலாமிடம் அளவெட்டி அருணோதயக் கல்லூரி, இரண்டாமிடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெறும் அணியினர் செப்ரெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் அகில இலங்கை பாடசாலைச் சதுரங்கப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

## பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

எனவே இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பதிவினை மேற்கொள்ள முடியுமென கலைவாணி விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது.

தொடர்பு கொள்ள விரும்பும் கழகங்கள் குமார் - 0776176708, சுலக்சன் - 0771642186 என்பவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி பதிவினை மேற்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதேச செயலக உதைபந்து சம்பியனானது கரவெட்டி



யாழ் மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த 23 ஆம் திகதி மாலை 4 மணியளவில் மருதங்கேணி உடுத்துறை பாரதி மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது. ஆட்ட முடிவில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் போடாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

போட்டியை தீர்மானிப்பதற்கு நடுவர் தண்ட உதை வழங்கினர். இத் தண்ட உதையினை கரவெட்டி பிரதேச செயலக அணி மிகவும் சரியாக பயன்படுத்தி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. கரவெட்டி பிரதேச செயலக அணி கோல்காப்பாளராக யங்கம்பன்ஸ் அணி வீரர் மகிந்தன் செயற்பட்டார்.

விளையாட்டுச் செய்திகள்

# பொலிகை செம்மீனின் விளையாட்டுப் போட்டிகள்

## கயிறுமுத்தலில் விண்மீன் சம்பியன்



பொலிகண்டி செம்மீன் விளையாட்டுக் கழகம் தனது 48 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது.

போட்டியின் தொடக்கமாக கடந்த சனிக்கிழமை மாலை கயிறு இழுத்தல் போட்டி, தலையணைச் சண்டை போன்றன இடம்பெற்றது. இப்போட்டிகளில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் ஏ, பி முறையே 1 ஆம் மற்றும் 2 ஆம் இடங்களை பெற்றுக் கொண்டது. இப்போட்டியைப் பார்வையிட ஏராளமானோர் வந்திருந்தனர்.இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் காலை மரதன் ஓட்டப் போட்டியும் [illegible] பெற்றது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



பசுபதி சீவரத்தினம்

(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)

6

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



# ஆமா... சொல்லிப்புட்டன் நக்கல் இருக்கலாம் நளினம் இருக்கக் கூடாது

அண்மையில் இலங்கையின் பொதுத்தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ் தேசியத்திற்கான சந்தை வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் குறிப்பிடுகின்றன. தமிழ் மக்களின் மொத்த வியாபாரியான கூட்டமைப்பின் தேசியத்தில் கலப்படங்கள் இருப்பதாக புலம்பெயர் வியாபாரிகள் சங்கம் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து நுகர்வோர் கூட்டமைப்பு வியாபாரிகளைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையில், பங்குச் சந்தையில் அவர்களின் தேசியத்திற்கு சற்று வீழ்ச்சியை உண்டு பண்ணியிருப்பதாக வன்னி பொருளியல் இதழிலிருந்து அறியக் கிடைக்கிறது. கூட்டமைப்பு பல்தேசியக் கம்பனி தனது தேர்தல் விஞ்ஞாபன கணக்கறிக்கையில் கலப்படம் ஏதுமற்ற சுத்தமான தேசியம் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கேற்ற விலையில் கிடைக்கும் என்று உறுதியளித்திருக்கிறது.

இதற்கிடையில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் தங்கள் வியாபாரத்தை ஆரம்பிக்கப் போவதாக வெளியே கூறிவந்த இலங்கைத் தமிழ் காங்கிரஸ் நிறுவனம் அவசர அவசரமாக ஏனைய இடங்களிலும் தங்கள் கிளைகளை உருவாக்கி கூட்டமைப்புக்கு சவாலாக வியாபாரத்தில் இறங்கி உள்ளனர்.



நிறுவனத்தின் தலைவர் அனுபவம் வாய்ந்த வியாபாரி ஆக இருந்தாலும் புதிய கிளைகளில் வேலை செய்பவர்களுக்கு இவர்களது தயாரிப்பை சந்தைப்படுத்தும் அணுகு முறை தெரியவில்லை என்றும், இன்னும் பயிற்சி மேற்கொண்டால் கூட்டமைப்பைப் போன்று மிகப் பெரிய வியாபார நிறுவனமாக உருவாகக் கூடிய அத்தனை அம்சங்களும் தென்படுவதாக தென்பகுதித் தரகர்கள் தெரிவிக்கின்றனர்.

புலம் பெயர்ந்த தேசத்தில் தயாரித்து புது வடிவத்துடன் இறக்கப்பட்டிருக்கும் "இரு கொட்டை ஒரு பழம்" என்ற இந்த தேசியத்தை வாங்கி உடைத்துப் பார்த்த நுகர்வோர் சிலர் உள்ளே வெறும் கொட்டை மட்டுமே உள்ளது என விசனப்பட்டுள்ளனர். இருப்பினும் யாழ்ப்பாணத்தில் இதனை எப்படியாவது சந்தைப்படுத்தி இலாபம் ஈட்டலாம் என்று புலம் பெயர் நிறுவனம் கொடுத்த உற்சாகத்திலும், நிதிப் பங்களிப்பிலும் நிறுவனத் தலைவர் புளகாங்கிதம் அடைந்திருப்பது தெரிய வருகிறது.

சிக்னல் மற்றும் கோல்கேற் பற்பசை நிறுவனங்களின் போட்டி உச்சத்தைத் தொட்டிருக்கும் இந்தச் சூழலில் வரலாறு காணாத வியாபார உக்திகளை இவ்விரு வியாபார நிறுவனங்களும் வடக்கு கிழக்கில் பயன்படுத்துவது இவர்களின் நிதிப் பங்களிப்பு நாடுகளுக்கு பலத்த மகிழ்ச்சியை உருவாக்கியிருக்கிறது என்று டெல்லியில் இருந்து கிடைக்கும் சந்தைப் பங்கீட்டு நிறுவனத் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

புலிகளின் சின்னம் இடப்பட்டு இந்த இரண்டு நிறுவனங்களும் சந்தைப்படுத்தும் தேசியம் பொட்டலத்திற்குள் இருக்கும் இரசாயனப் பொருட்களின் அளவு சாதாரண மக்களின் அழிவை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்று அங்குள்ள இனவெறி சாராய எதிர்புக் குழு தெரிவித்திருக்கிறது.

**(நன்றி: தேசிய விற்பனை நாளேடு)**

## பப்பாசியின் நன்மைகள்

பப்பாசிப் பழமா? வேண்டவே வேண்டாம் என ஒதுக்குவோர் பலர் உண்டு.

அமெரிக்காவை கண்டு பிடித்த கொலம்பஸ், பப்பாசிப் பழத்தை தேவதைகளின் பழம் என்று சொல்லியிருக்கிறார். அதுமட்டுமல்ல; இதன் மருத்துவ குணங்கள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். அவை இங்கே:

வயிற்றில் உள்ள பூச்சிகளைக் கொல்ல வல்லது.

தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு நல்ல மருந்து

கொழுப்பைக் குறைத்து இதயத்தைப் பலப்படுத்தும்

செரிமான சக்தியை அதிகரிக்கும்.

எடையைக் குறைக்க விரும்புவோருக்கு ஏற்றது.

மூட்டுவலிக்கு நல்ல வலி நிவாரணி.


நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்.

பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளைக் குணமாக்கும்.

பப்பாசி சாப்பிடுவோர் இளமையோடு இருப்பர்.

பித்த வெடிப்புக்கு நல்ல மருந்து.

கண்ணில் புரை விழுவதைத் தடுக்கும்.



# உயிர் கொல்லும் நுண்கடன் பற்றி உரையாடும் தெருவெளி அரங்கு

- ப.ராஜதிலகன் — 2

**(நேற்றைய தொடர்ச்சி)**

கடனை அறவிடுவதற்காக கடன் கொடுத்தவன் ஊருக்குள் வர மக்கள் அவனைக் கண்டு ஒளிந்து கொள்வதும் மற்றவர்கள் அவர்களைக் காப்பாற்ற முனைவதும் கடன் கொடுக்க முடியாது அவதிப்படுவதும் அடுத்தக் கடனை எடுக்க முடியாதோ! என்ற நிலைப்பாட்டில் கடனைக் கட்டியவர்கள் கடன் கட்ட இயலாதவர்களிடம் சண்டை பிடிப்பதும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் காட்டப்படுகின்றது.

பின்னர் வீட்டினை குறியீடாகக் கொண்டு வந்து அவ்வீட்டிற்குள் இந்தக் கடனால் கணவன் மனைவிக்கு இடையில் ஏற்படுகின்ற வன்முறையும் அதனால் ஒரு குடும்பம் சிதைவுபடுதலையும் காட்சிகளுக்கூடாகவும் பாடலுக்கூடாகவும் கொண்டு வரப்படுகின்றது.

பெண்ணைப் பற்றிய சமூகத்தின் பிழையான பார்வையால் அவள் தற்கொலைக்கு முயற்சி செய்து பின்னர் அப்படியே உறை நிலையாகி விட கடனால் ஏற்படுகின்ற பாரதூரமான விளைவுகளைப் பின்வரும் பாடல் மூலமாக உருக்கமாகச் சொல்லப்படுகின்றது.

புத்தி இருந்தும் சக்தி இருந்தும்
பிழைக்கத் தெரியல - எங்களால்
பிழைக்கத் தெரியல
அறிவிருந்தும் ஆற்றலிருந்தும்
உயர முடியல - எங்களால்
உயர முடியல
கரமாய் வந்த கடனும் இப்போ
கழுத்தை நெரிக்குதே - ஐயோ
கழுத்தை நெரிக்குதே
வாங்கிய பணத்துக்கு வட்டியும் கட்டி
ஆயுளும் முடியுதே
வாழ்வு நோயிலும் அழியுதே
மன நோயிலும் மடியுதே-!

என்று முடிய எல்லோரும் காட்சிப் படிமங்களாக மாறுகின்றனர்.

பின்னர் மீண்டும் கடன் கொடுப்பவரின் சத்தம் கேட்டு மக்கள் பயந்து ஓட கடன் கொடுப்பவர் அவர்களை விடாமல் பிடித்து இழுத்துக் கொள்கிறார். அப்போது பார்வையாளர்களுக்குள் இருந்தவாறு ஒருவர் சத்தத்தோடு ஓடிவந்து "என்ன ஓடி ஓடி எடுத்தியள். இப்போ ஓடி ஓடி ஒளியிறியள்" என்று அவர்களைப் பார்த்துக் கேட்க ஒவ்வொருவரும் தாங்கள் விட்ட பிழைகளைச் சொல்லுவார்கள்.

நபர் 1 : நாங்க லோன் எடுக்க முதல் வட்டிய பத்தி நினைச்சிருந்தா எங்களுக்கு இந்த நிலை வந்திருக்குமா?

கடன் கொடுப்பவர் : கடன் தாறது உங்கட வாழ்வாதாரத்த மேம்படுத்தத்தான்

நபர் 4 : அப்ப ஏன் அது கொலைக் கயிறா மாறினது?

நபர் 5 : அப்போ எங்களுக்கு காசி தான் முக்கியமாக இருந்தது. சைன் மட்டும் தான் வைச்சம். வேறொன்னும் விளங்கல

கடன் கொடுப்பவர் : ஏன் அண்ணன் தமிழ்ல தானே இருந்தது?

நபர் 6 : பெயரும் ஊரும் தான் தமிழ்ல இருந்துது

நபர் 7 : நான் வச்ச கையெழுத்து என்ட தலையெழுத்தையே மாத்திப் போட்டுது

இவ்வாறான உரையாடலுக்கூடாக பார்வையாளர்களை நோக்கி பல்வேறு கேள்விகளை முன்வைக்க அது உரையாடலுக்கு இட்டுச் செல்கிறது.

இவ்வாறாக இந்நாடகத்தின் கதை அமைப்பானது பல காட்சிகளுக்கூடாகவும் குறியீட்டுத் தன்மையாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நாடக உருவாக்கத்திற்கு அதில் வருகின்ற உரையாடல்கள், காட்சியமைப்புகள், பாடல்கள் போன்ற அனைத்து விடயங்களும் அனைவரும் இணைந்து கூட்டுச் செயற்பாடு மூலம் உருவாக்கப்பட்டதாகும்.



நுண்கடன் பற்றிய இத்தெருவெளி அரங்க உருவாக்கமானது ஏனைய தெருவெளி அரங்க முறைகளிலிருந்து வேறுபட்ட முறையில், பாரம்பரிய விளையாட்டுக்களை வைத்துக் கொண்டு நாடகமாக வடிவமைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்பத்தில் நாடகம் கொத்திருக்கு கொத்து எனும் விளையாட்டில் தொடங்கப்பட்டு பின்னர் அவ்விளையாட்டு மாறி "கடன் இருக்கு கடன்" என்ற மையக் கருவை நோக்கி நகர்த்தப்படுகின்றது. இவ்வுத்தி முறையானது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் இலகுவாக நாடகத்தின்பால் இழுப்பதற்குப் பலமாக அமைகின்றது. பின்னர் கரடி ஊருக்குள் வருதல் விளையாட்டானது எவ்வாறு கடன் கொடுப்பவர் மக்களைத் தன் பக்கம் இழுக்கின்றார் என்பதனை காட்டுவதற்காகப் பயன்படுகிறது.

கடன் கொடுக்கும் போது வட்டி வீதம், நிபந்தனைகள் போன்றவற்றை கேட்காமல் பணத்தை அடிபிடிபட்டு எடுக்கின்ற நிலையில் தான் இன்று மக்கள் இருக்கின்றனர் என்பதனை சித்திரிப்பதற்கு நாயும் இறைச்சித் துண்டும் எனும் விளையாட்டு. மேலும் கடனை எடுத்து விட்டுக் கடனை அறவிட வரும் போது கட்ட முடியாத நிலையில் சிலர் ஒளிந்து கொள்கின்றனர். அதனை ஏனையவர்களும் பொய் சொல்லி மறைக்கின்ற நிலைதான் இன்றைய சமூகத்தில் பரவலாக நிலவுகின்றது. இதற்கு சங்கிலி புங்கிலி விளையாட்டு குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது.

நாடகம் முடிவடைந்ததும் பார்வையாளர்கள் பல கருத்துக்களை முன்வைத்து நடிகர்களுடன் நுண்கடன் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களையும் அதனால் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றியும் தெளிவாக உரையாடுகின்றனர். இவ்வாறான உரையாடல்கள் மூலமாக நடிகர்கள் மக்களுக்குத் தெளிவை ஊட்டுபவர்களாக இருக்க வேண்டும்.

தெருவெளி அரங்கச் செயற்பாடுகளானது இன்றைய சமூகத்தில் பரவலாக காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அலசி ஆராய்ந்து வருகின்றது. அதிலும் இன்றைய சமகாலத்தில் காணப்படுகின்ற கடன் தொடர்பான பிரச்சினைகளும் அதன் விளைவுகளும் அவ்விளைவுகளிலிருந்து தம்மை எவ்வாறு விடுவித்துக் கொள்வது என்பது பற்றிய விழிப்புணர்வையும் சுயசார்புள்ள மனிதர்களாக வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தி, சமூக முன்னெடுப்புக்கான காத்திரமான உரையாடலை மேற்கொள்கின்ற களமாகவும் அமைந்தது என்பது திண்ணம்.

# பேராசிரியர் சாந்தசீலன் கதிர்காமர் மறைவு



முற்போக்கு ஜனநாயகவாதியும் -மனித உரிமைச் செயற்பாட்டாளரும் ஆன சீலன் கதிர்காமர் தனது 81ஆவது வயதில் 25.07.2015 காலமானார். கொழும்பு, யாழ் பல்கலைக்கழகத்திலும் பின்னர் ரோக்கியோ பல்கலைக்கழகங்களிலும் நவீன வரலாறு மற்றும் சர்வதேச அரசியல் கற்கைப் பேராசிரியராக பணியாற்றியவர்.

1930 களில் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிதமான இளைஞர் காங்கிரஸ் பற்றிய விவரணத்தை புதிய தலைமுறைக்கும் எதிர்காலத்திற்குமாக மும் மொழிகளிலும் பதிவு செய்தார்.

இலங்கையின் உண்மையான சுதந்திரத்தை நேசித்த யாழ்ப்பாணத்தின் தீண்டாமை அநீதிகளை எதிர்த்த ஒரு இயக்கம் யாழ்ப்பாணத்தில் உருவானது பற்றியும்,

இந்திய சுதந்திர இயக்கத்துடன் அதற்கிருந்த தொடர்பு பற்றியும் முக்கியமான வரலாற்றுப்பதிவை மேற்கொண்டவர்.

வழமையாகப் பேசப்படும் அலுப்புக் கொள்ள வைக்கும் வரலாற்றை விட வித்தியாசமான ஆர்வமூட்டும் ஒன்றது. எமது பகுதிகளில் முற்போக்கு இயக்கத்தின் வேர் எது என்பதை அறிவார்ந்த முறையில் அடையாளம் காட்டினார்.

சமூகத்துடன் தொடர்புபட்டுச் செயற்படுவது பற்றிய பிரக்ஞை அவரிடம் இருந்தது. எமது கிராமங்களில் ஆங்கில அறிவை விருத்தி செய்வது கல்வியின் தரத்தை உயர்த்துவது -உயர் கல்விச் சீர்திருத்தம் பற்றிய அக்கறைகள் இருந்தன.

நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தில் மிக நெருக்கடியான காலத்தில் காலஞ்சென்ற தோழர் பரராசசிங்கம், வண.பிதா ஜெயசீலன் போன்றவர்களுடன் இணைந்து வட பகுதியில் பணியாற்றினார்.

1981 இல் யாழில் நேர்ந்த அனர்த்தங்கள் பற்றி விரிவான முக்கியத்துவம் வாய்ந்த பதிவுகளை ஆங்கில- தமிழ் மொழிகளில் மேற்கொண்டவர்.

குறிப்பாக யாழ். பொது நூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், புதிய சந்தை எரிக்கப்பட்டது- படுகொலைகள் அராஜகங்களை ஆதாரபூர்வமாக சிறப்பாகப் பதிவு செய்தார். இங்கு அரங்கேற்றப்பட்ட அராஜகங்களை நாடும் உலகும் அறியச் செய்ததில் சீலனின் பங்கு முக்கியமானது.

நாம் ஈழமாணவர் பொதுமன்றமாக செயற்பட்ட காலத்தில் எமக்கு நம்பிக்கை அளிப்பவராக சீலன் விளங்கினார். முற்போக்கான மாணவர் இளைஞர் இய்க்கங்களின் உருவாக்கம் எப்போதும் அவருக்கு ஆர்வமூட்டுவதாக இருந்தது.

1982 இல் ஜே.ஆர் பாராளுமன்றத்தின் ஆட்சிக்காலத்தை அடுத்த 6 ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் ஜனநாக விரோத சர்வசன வாக்கெடுப்பை நடத்த ஆயத்தமாகியிருந்தார்.

வழமையான தேர்தல் பகிஸ்கார எண்ணத்திலேயே ஈழமாணவர் பொதுமன்றமாக செயற்பட்ட நாம் இருந்தோம். சீலன் இத்தேர்தலில் பாராளுமன்றக் காலத்தை நீட்டிப்பதற்கெதிராக மக்கள் வாக்களிக்குமாறு செயற்படுங்கள் என்று எமக்கு ஆலோசனை கூறினார்.

1980களின் முற்பகுதியில் யாழ்.பல்கலைக்கழகத்தின் மறுமலர்ச்சிக்கால பேராசிரியர் அவர். தேடலும் சமூகப்பிரக்ஞையும் உள்ள மாணவர்களாலும் முற்போக்கு ஜனநாயக முகாமைச் சேர்ந்தவர்களாலும் அறியப்பட்டவர். பெரிதும் நேசிக்கப்பட்டவர்.

அறிவார்ந்த இணக்கமான சமூக வாழ்வை ஏற்படுத்துவதற்கான அவரின் கனவுகள் நிகழ் காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் அவசியமானவை.


அவரின் புதல்வர்களில் ஒருவரான அகிலன் கதிர்காமரும் தனது தந்தையின் பிரக்ஞைகளின் செல்வாக்கிற்குட்பட்டவர்.

ஆங்கில விரிவுரையாளரான அவரது துணைவியார் புதல்வர்கள் எல்லோருமே பேராசிரியர் சீலனின் இடையறாத செயலூக்கமான சமூக அக்கறைகளுக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது" எவ்வாறு என்பதை சீலன் உணர்த்திச் சென்றார்.

சுகு- ஸ்ரீதரன்

இங்கிலாந்து இளவரசர் வில்லியம் - கேட் மிடில்டன் தம்பதியின் திருமணம் முடிந்து, நான்கு ஆண்டுகள் ஆகின்றன. இரு குழந்தைகளும் பிறந்து விட்ட நிலையில், இந்நான்கு ஆண்டுகளும் சந்தோஷமாக உலா வந்த இளவரசி கேட்



# இளவரசிக்கு வந்த சோதனை!

மிடில்டன், இப்போது, சோகத்தில் மூழ்கியுள்ளார். காரணம், திருமணத்துக்கு முன், வில்லியமும், கேட்டும், செய்ன் அன்றூஸ் பல்கலைக்கழகத்தில், ஒன்றாகப் படித்தனர்; அங்கு தான், இருவருக்கும் காதல் மலர்ந்தது.

காதலித்த நாட்களில், இருவரும், தொலைபேசியில் மணிக்கணக்கில் பேசுவர். அப்போது, வில்லியமின் பாட்டியும், இங்கிலாந்தின் ராணியுமான எலிசபெத் பற்றியும், இளவரசி டயானா மற்றும் தம்பி ஹரி ஆகியோரைப் பற்றி, எனக்குத் தப்பாக கிண்டலும், கேலியும் செய்து பேசியுள்ளார் கேட்.

அந்தத் தொலைபேசி உரையாடல்கள் அனைத்தையும், இங்கிலாந்தில் உள்ள ஒரு பத்திரிகை நிறுவனம் ஒட்டுக் கேட்டுப் பதிவு செய்துள்ளது. அதை, விரைவில் வெளியிடவும் அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. "அந்தத் தொலைபேசி உரையாடல் பதிவு வெளியானால், ராணி எலிசபெத் உள்ளிட்ட ராஜ குடும்பத்தினர் தன் மீது வைத்துள்ள மரியாதை காற்றில் பறந்து விடுமே..." என, தற்போது கலங்கிப் போயுள்ளார் கேட்.

# நாகூர் ஹனீஃபா



"இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லை என்று சொல்வதில்லை" பாடல் அறியாதவர் கிடையாது.

"எல்லோரும் கொண்டாடுவோம், அல்லாவின் பேரைச்சொல்லி நல்லோர்கள் வாழ்வை எண்ணி" பாவமன்னிப்பு பாடலில் சௌந்தர் ரராஜனுடன் சேர்ந்து "கறுப்பில்ல வெளுப்பும் இல்லே

கனவுக்கு உருவமில்லே கடலுக்குள் பிரிவும் இல்லை கடவுளில் பேதமில்லை" பாடிய ஈ.எம்.ஹனி∴பா

"அழைக்கின்றார், அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா!".

"ஓடி வருகிறான் உதய சூரியன்!"

"கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!"

"எங்கள் வீட்டுப்பிள்ளை, ஏழைகளின் தோழன், தங்க குணம் கொண்ட கலை மன்னன், மக்கள் திலகம் எங்கள் எம்ஜிய஋ர் அண்ணன்!"

எம்.ஜி.ஆர் அ.தி.மு.க. ஆரம்பித்து பின், 1973 திண்டுக்கல் இடைத்தேர்தலின் போது நாகூர் ஹனி∴பா தி.மு.க பிரசாரத்தில் பாடிய சவால் பாடல் -

"நன்றி கெட்ட கிழவனுக்கும் நாணயமில்லா குள்ளனுக்கும்
நாங்கள் ஒன்று சொல்லுகிறோம்.
வந்து பாரும், திண்டுக்கலில் நின்று பாரும்!
நன்றி கெட்ட மோகனுக்கும் நாணயமில்லா சுப்பனுக்கும்
நாங்கள் ஒன்று சொல்லுகிறோம்
வந்து பாரும், திண்டுக்கலில் நின்று பாரும்!-

இந்தப் பாடலில் குறிப்பிடப்படுபவர்கள்

கிழவன் - எம்ஜியார்

குள்ளன் - மதியழகன் (எம்.ஜி.ஆர் பிரிந்த போது சட்டமன்ற சபாநாயகர்)

மோகன் - மோகன் குமாரமங்கலம் (அப்போது மத்திய அமைச்சர்)

சுப்பன் - சி.சுப்பிரமணியம் (அப்போது மத்திய அமைச்சர்)

இந்தத் தேர்தலில் நான்கு முனைப்போட்டி. வாக்கு எண்ணிக்கையில் இரண்டாம் இடம் பெற்ற ஸ்தாபன காங்கிரஸ் மீது கூட மூன்றாமிடம் பெற்ற ஆளும் கட்சி தி.மு.க.விற்கு கோபமில்லை. அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அ.தி.மு,க. மீதும் நான்காமிடத்தில் படுதோல்வியடைந்த இந்திரா காங்கிரஸ் மீதும் தான் கடும் வெறுப்பு.

R.P.ராஜநாயகம்

# உருவான கருவைப் பாதுகாப்பது எப்படி?


"குழலல் இனிது யாழ் இனிது என்பர்
தம் மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"

இறைவனால் கொடுக்கப்படும் மிகப் பெரிய பரிசு, வரம், அருள், வரப்பிரசாதம் இப்படி சொல்லிக் கொண்டே போகலாம் குழந்தையை. இப்படி அற்புதமான வரமான அந்தக் குழந்தை ஏன் ஒரு சிலருக்கு வாய்ப்பதில்லை? குழந்தைப் பாக்கியம் கிட்ட என்ன செய்ய வேண்டும்?

இன்றைய காலத்தில் 10-இல் 4 பேர் குழந்தைக்காக தவமாய், தவம் கிடக்கிறார்கள். முன்பெல்லாம் இந்த மாதிரிக் குறைபாடுகள் மிகவும் குறைவு. முன்பு பெண்களுக்கு உடலளவிலோ, மனதளவிலோ அவ்வளவு ரென்சன், மன அமைதியின்மை, குடும்பச் சுமை இருந்ததே இல்லை. இன்றோ தேவையே இல்லாத காரியங்களுக்காக அவதிப்பட்டு அவர்களின் உடலையும், மனதையும் அலைக்கழிக்க் விடுகிறார்கள். மனதுக்கும், உடலுக்கும் நிறையத் தொடர்பு உள்ளது. எனவேதான் இன்று குழந்தையின்மை பிரச்சினையும் பெருகியுள்ளது.

ஒரு கரு உருவாகவில்லை எனில் அதற்கு மேலே சொன்ன காரணங்களும், உணவு முறையும்தான் காரணம். அந்தக் காலத்தில் மகான்களும், பெரியோர்களும் இதற்கு நிறையவே தீர்வு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நாம் தான் நாகரீக காலத்தில் வாழ்கிறோமே, முன்னோர் சொல்லை எப்படிக் கேட்போம்?

எதற்கெல்லாமோ, யார் யாருக்காகவோ வாழ்க்கையை மாற்றிக் கொள்ளும் நீங்கள் ஒரு



குழந்தைக்காக ஏன் உங்கள் உணவையும், மனதையும் மாற்றிக் கொள்ளக் கூடாது? உங்களுக்கு ஒன்று தெரியுமா? ஒரு கரு உருவாகும் சக்தி உங்கள் சிறுநீரகத்திடமே உள்ளது. அந்த அற்புதமான, கிட்னியை ஆற்றல் உடையதாக மாற்ற வேண்டுமேயானால் உணவும், மனமும் மிகவும் முக்கியம்!

கருவைப் பாதுகாப்பது: பதட்டமில்லாத மன நிலை, படபடப்பு இல்லாத வாழ்க்கை, தேவையான அளவு ஓய்வு, உடலை ஆரோக்கியமாக்கும் உணவு. மருந்து, மாத்திரையை விட்டுவிடுவது கருவின் உடல் நலத்திற்கு மிகவும் நல்லது. இன்றைய காலத்தில் பெண்கள் கர்ப்பமாகிவிட்டாலே குழந்தை வெளியே வரும் வரை படுக்கை ஓய்வு தேவை என்று நினைக்கிறார்கள். அதன் பின்பும் ஓய்வுதான். காரணம் அறுவைச் சிகிச்சை செய்து குழந்தையை எடுத்த பின்பு அவர்களால் எப்படி ஓடி, ஆடி வேலையைச் செய்ய இயலும்.

கர்ப்பகாலத்தில் தங்களுடைய வீட்டு வேலைகளை எல்லாம் தாங்களே செய்து கொள்ளலாம், நன்கு குனிந்து நிமிர்ந்து வேலை செய்தால் அறுவைச் சிகிச்சையை நாட வேண்டிய அவசியமே இருக்காது.

கருவிலுள்ள குழந்தைக்கு எந்த நோயும் தாக்காமலிருக்க கருவுற்ற 3,5,7ஆம் மாதம் மண்ணீரலில் 9ஆவது வர்மப் புள்ளியையும் (இதை அருகிலுள்ள மாற்றுமுறை மருத்துவரிடமோ இன்ரநெற்றிலோ அறியுங்கள்) சாதாரண பிரசவம் நடைபெற சிறுநீர்ப்பையின் (4 M 67) 67ஆவது புள்ளியையும் 9 மாதம் முடிந்து ஒரு வாரம் ஆன பின்பு இந்த வர்மப்புள்ளியை அழுத்தம் கொடுக்கும் போது (இது காலின் சின்ன விரல் நகம் ஆரம்பிக்கும் இடத்தில் உள்ளது) குழந்தை குறுக்காக இருக்கிறது என்று கூட கேள்விப் பட்டிருப்பீர்களே அந்த மாதிரியான சூழ்நிலையில் கூட இந்த வர்மப்புள்ளி உதவும். சாதாரணமாக் பிரசவம் நடைபெறும். எவ்வளவோ நல்ல விஷயம் நம்மைச் சுற்றியுள்ளது. நாம்தான் அதை .பொருட்படுத்துவதே இல்லையே!

- எஸ். கனகதுர்காலக்ஷ்மி -

**மேடம்**
பொருட் கொள்வனவில் நம் பகத்தைக் கைவிடாதிருத்தல்.

**ரிஷபம்**
பரீட்சையில் சித்தியடைய சக பாடிகளின் உறவினைத்துண்டித்து விடல்.

**மிதுனம்**
பயணமுயற்சி இடைத்தங்கல் நாட்டில் இறக்கி விடல்.

**கடகம்**
மாதாவின் உடல் நலம் திடீரென பாதிப்படைதலால் அச்சநிலை.

**சிம்மம்**
பரீட்சை சித்தியினால் அரசுப் பணி கிடைக்கும் நம்பிக்கை பிறத்தல்.

**மீனம்**
பாதுகாப்பை உறுதிப்படுத்தியதனால் திருட்டுப் போகாது விடல்.

## முரசின் இன்றைய பலன்

(29.07.2015 புதன்கிழமை)

மன்மத வருஷம் ஆடி மாதம் 13 ஆம் திகதி.
திரயோதசி திதி. மரண யோகம்.
மூல நட்சத்திரம் பிற்பகல் 12.27 வரை. பின் பூராடம்.
இராகு காலம் 12.03 - 01.33 வரை. சுபநேரம் 04.33 - 06.03 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**கன்னி**
சமயோசித புத்தியினால் விபத்தினின்றும் தப்பிவிடல்.

**கும்பம்**
கள்ள நோட்டுக்கள், முலாம் பூசிய நகையணிகள் சேரும் அபாயமுண்டு.

**மகரம்**
கௌரவ பதவிகிட்ட பிரமுகரின் சிபார்சு ஏற்படல்.

**தனுசு**
காரிய சித்திக்காக அலைச்சலும் அகால வேளை உணவும் தக்க வைத்தல்.

**விருச்சிகம்**
கிரகசாந்திகள் செய்வதன் மூலம் விவாகத் தடை நீங்கும் நம்பிக்கை பிறத்தல்.

**துலாம்**
நோய் குணமடைய தெய்வ தலங்களை நாடிச் செல்ல முற்படல்.

# உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு ஆசி வேண்டி முருங்கனில் வழிபாடு



(கிளிநொச்சி)

முருங்கன் கோட்டக் கல்வி வலயத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கும் விசேட ஆராதனை நேற்றுமுன்தினம் காலை முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது. ஆராதனையை மறை கோட்ட குருக்கள் இணைந்து ஒப்புக்கொடுத்தார்.

பரீட்சையில் நல்ல முறையில் சித்தியடைய இறை அருள் வேண்டி குறித்த ஆசீர்வாத ஆராதனை நடைபெற்றது. முருங்கன் கோட்டக்கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்குபற்றி செபவழிபாடுகளில் ஈடுபட்டனர்.

புலன்களை சிதறவிடாமல் மனதை ஒருநிலைப்படுத்தி கல்வியில் அக்கறையுடன் மாணவர்கள் செயற்பட மனக் கட்டுப்பாட்டை வழங்கும் ஆன்மீக செற்பொழிவுகள் இங்கு இடம்பெற்றன.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



முருகேசு சந்திரகுமார்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)



X 7

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியின் குறைபாடுகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரியில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் தொடர பில் உயர்மட்டக் குழு ஆராய்ந்துள்ளது.

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் நீண்ட காலமாக நிலவும் பல்வேறு குறைபாடுகளுக்குத் தீர்வு காண வலியுறுத்திக் கடந்த இருவார காலமாக கல்லூரி மாணவர்கள் தொடர் போராட்டம் முன்னெடுத்து வந்த நிலையில் தற்போதும் மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கல்லூரி மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் விடுத்த கோரிக்கைக்கமைய நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பிலிருந்து வருகை தந்த தொழில் நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் 7 பேர் கொண்ட உயரதிகாரிகள் கல்லூரியில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் தொடர பில் ஆராய்ந்ததோடு இது தொடர்பில் கல்லூரியின் மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்களுடன் வெவ்வேறாகவும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.



# யாழ்.மாவட்ட செயலகத்தின் முதலாவது செயலக மடல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் இவ்வருடத்திற்கான முதலாவது செயலக மடல் இன்று வெளியிடப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற, இடம்பெறும் அபிவிருத்தி மற்றும் விசேட சேவைகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய மடல் காலாண்டிற்கு ஒரு முறை மீண்டும் இவ்வருடத்திலிருந்து வெளியிடுவதாக மாவட்ட செயலகத்தால் தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் மாவட்டத்தின் முதலாவது பிரதேச செயலகமாகிய நெடுந்தீவு பிரதேச செயலகம் ஆகியவற்றின் செயற்பாடுகளை உள்ளடக்கிய இவ்வருடத்திற்கான முதலாவது செய்லக மடல் இன்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனால் வெளியிடப்படவுள்ளது.

இம் மடல் இலங்கையின் அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும், மத்திய மற்றும் மாகாண அரசின் திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

# இயற்கை மற்றும் சூழலியலிலான சான்றிதழ் கற்கைநெறி

இயற்கை மற்றும் சூழலியலிலான சான்றிதழ் கற்கை நெறி இடம்பெறவுள்ளது. இயற்கை மற்றும சுற்றுச் சூழலில் ஆர்வமுடைய சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகளுக்காக இக்கற்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. துறைசார் வளவாளர்களால் மேற்கொள்ளப்படவுள்ள 03 மாத காலத்திற்கான இக் கற்கை நெறியில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு, பறவை ஆய்வுகள், இயற்கை கள ஆய்வுகள் போன்ற ஆய்வுகளும், விரிவுரைகளும் உள்ளடக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் முகவரிக்கு நாளைய தினத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரியும், கற்கை நெறி நடைபெறும் இடமும், Coordinator Centre for Children's Happiness (Gte) Ltd, No.15, Kachcheri Nallur Road, Jaffna, E mail: cch.jaffna@gmail.com, T P.: 021 720 0278 / 077 265 8002 இக் கற்கை நெறியின் ஆரம்ப வகுப்பு எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறும்.

# உதவித்திட்டப்பதிவு

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனின் விசேட வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வடக்கின் ஐந்து மாவட்டத்திலும் உள்ள சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் சுமார் 324 குடும்பங்களுக்கு தலா ஐம்பதாயிரம் வீதம் அவர்களது நிரந்தர வருமானத்தை உருவாக்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் தற்போது ஏனைய மாகாணங்களில் இருந்தும் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் அமைச்சருடன் தொடர்புகொண்டு தமது குடும்ப நிலவரம் தொடர்பாக கதைத்ததற்கு அமைவாக, இத்திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவ்வாறு காணப்படும் ஏனைய மாகாணங்களில் உள்ள அரசியல் கைதிகளின் குடும்பங்கள், சிறையில் உள்ளவர்களின் சகல விபரங்களோடும் இன்று புதன் முற்பகல் 10 மணிக்கு மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்துக்கு தவறாது சமூகம் தந்து தமது பதிவுகளை மேற்கொண்டு உதவித்திட்டத்தினை பெற்றுக் கொள்ளுமாறும் இச்சந்தர்ப்பத்தை தவறவிடுபவர்கள் இந்த ஆண்டுக்கான திட்டத்தில் சேர்க்கப்பட மாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(160)

# பழைய இரும்பு வியாபாரிகள் யாழில் தொழிலின்றி பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறி வாழும் பழைய இரும்பு வியாபாரிகள் தொழிலின்றி பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கிராமங்களுக்குச் சென்று பழைய இரும்புகளை சேகரித்து வருபவர்கள் யாழிலுள்ள மொத்த வியாபாரிகளுக்கு அவற்றை வழங்குகின்றனர்.

இவர்கள் கொழும்பிலுள்ள இரும்பு தொழிற்சாலைக்கு பழைய இரும்புகளை விற்பனை செய்தும் வந்துள்ளனர்.

தற்போது இரும்புத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் தனிப்பட்ட வியாபாரிகள் பழைய இரும்புகளை விலை குறைத்து கொள்முதல் செய்வதாகவும் அறியப்படுகின்றன.

இது சம்பந்தமாக இரும்பு சங்கத்தின் செயலாளர் கே.எம். நிலாமிடம் வினவிய போது தற்போது யாழில் சில்லறை வியாபாரிகளிடமிருந்து கிலோ ரூபா 25இற்கு பழைய இரும்பு பெற்றுக்கொள்வதாகவும் மொத்த வியாபாரிகள் எம்மிடமிருந்து கிலோ ஒன்று ரூபா 34 இற்கு பெற்றுக்கொள்வதாகவும் கூறுகின்றார். மாதம்பைக்கு பழைய இரும்புகளை இவ் விலைக்கு கொடுப்பதால் எவ்வித பயனும் இல்லாததினால் இருமபு கொள்முதல் செய்வதை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும் கூறினார். (105)

# அங்கவீனர் இயலாதோரின் வாக்களிப்பிற்கு வசதி

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பார்வை மற்றும் உடல் வலிமை இழப்புக்கு ஆளானவர்கள் வாக்களிப்பதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கிணங்க பாதிப்புக்குள்ளானவரை வாக்களிப்பு நிலையத்துக்கு அழைத்துச் செல்லவென வேறொரு நபரை அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியுமென தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வலிமை இழப்புக்கு ஆளானவரை அழைத்துச் செல்லும் நபர் 18 வயதை பூர்த்தி செய்வதாகவும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராகவோ அன்றி அரசியல் கட்சியொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவராகவோ இருக்கக் கூடாதெனவும் ஆணையாளரின் அந்த அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த வாக்காளரை அழைதத்துச் செல்லும் நபர் அதற்கான விண்ணப்பத்தினை கிராம சேவகரிடம் சமர்ப்பித்து அவரது சான்றிதழை பெற்றுக்கொள்வது அவசியமெனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர், அச்சான்றிதழ் அரசாங்க வைத்தியர் அதிகாரியினால் பரீட்சிக்கப்பட்டு குறித்த வாக்காளரினால் வலிமை இழப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளரின் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சிறுநீரக நோயாளிகளுக்கு ஆயுர்வேத சிகிச்சைக்கு ஏற்பாடு

வாராந்தம் 250 சிறுநீரக நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான திட்டமொன்றை ஆயுர்வேத திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

நாடு முழுவதும் அதிகரித்துச் செல்லும் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கையை கவனத்தில் கொண்டு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஆயுர்வேத ஆணையாளர் பாலித விஜயக்கோன் தெரிவிதத்துள்ளார்.

சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சை நடவடிக்கைகளை பரந்தளவில் முன்னெடுப்பதற்கு வசதியாக ஒவ்வொரு மாகாண ஆயுர்வேத ஆணையாளரதும் உதவியுடன் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

இதேவேளை இயற்கை முறையிலான ஆயுர்வேத சிகிச்சையின் மூலம் பக்கவிளைவற்ற மருத்துவ சேவையை வழங்க முடியுமென ஆயுர்வேத திணைக்கள வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

# "போதை எமக்கு பகை" தெருவெளி ஆற்றுகை

புத்தாக்க அரங்க இயக்கத்தின் "போதை எமக்கு பகை" தெருவெளி ஆற்றுகை நேற்று முன்தினம் சுழிபுரம் குடாக்கனையில் இடம்பெற்றது

வேள்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலகமும் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமும் இணைந்து வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இந்த ஆற்றுகையை மேற்கொண்டு வருகின்றது.

போதைப்பொருள் விழிப்புணர்வு பிரசார செயற்பாட்டின் அங்கமாக புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் எஸ்.ரி. குமரன் எஸ்.ரி.அருள்குமரனின் நெறியாள்கையில் புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்களினால் நடாத்தப்பட்டு வருகின்றது.



சுழிபுரம் குடாக்கனை அம்மன் ஆலய முன்றிலில் இந்த ஆற்றுகை நேற்றுமுன்தினம் திங கட்கிழமை மாலை 5 மணிக்கு நிகழ்த்தப்பட்டது.

இவ் ஆற்றுகை இன்று அராலி கிழக்கு பிரதேசத்தில் மாலை 5 மணிக்கு ஆற்றுகை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (63)

# ஆயுர் வேதம்

## உட்புற வறட்சியால் ஏற்படும் உபாதை!



வயோதிபத்தில் உடலிலுள்ள உட்புற நெய்ப்பு குறைவதாலும், வாயு தோஷத்தின் ஆதிக்க குணங்களாகிய வறட்சி குளிர்ச்சி ஆகியவற்றால் நரம்பு, தசை, தோல், எலும்புகள், உட்புறச் சவ்வுகள் ஆகியவற்றால் ஏற்படும் உட்புற வறட்சியால் Cramp எனும் திடீர் தசை இழுப்பு, கைகால் விரல்கள் மடங்கிக்கொள்ளுதல், முழங்கால் மற்றும் தோளை மடக்கி நீட்டும்போது வலியுடன் மொடக் என்று சத்தம்... இதுபோன்ற உபாதைகள் ஏற்படுவது இயற்கையே.

மறுபடியும் இழந்துபோன நெய்ப்பை சம்பாதித்துக் கொள்வதாலும் வாயுவினுடைய வறட்சி மற்றும் குளிர்ச்சியின் தாக்கத்தை குறைப்பதாலும் இதுபோன்ற உபாதைகளுக்கு நிவாரணம் காணலாம். ஒரு சில ஆயுர்வேத சிகிச்சைமுறைகள் கீழ்காணும் வகையில் செய்யப்பட்டால் குணம் பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

ஆயுர்வேத மூலிகைத் தைலங்களாகிய பலாஅஸ்வகந்தாதி, மஹாமாஷதைலம், வாதமர்த்தனம் குழம்பு, வாதாசினீ தைலம், ப்ரபஞ்சன விமர்த்தனம் குழம்பு, தான்வந்தரம் குழம்பு, பரிணதகேர்யாதி, ப்ரஸாரின்யாதி, மஞ்சிஷ்டாதி தைலம் போன்றவற்றில் உங்களுடைய உடல் தன்மைக்கேற்ப கலந்து ஒரு இரும்புச்சட்டியில் சூடாக்கி பஞ்சினால் பிழிந்தெடுத்து உடலிலிருந்து சுமார் 12 அங்குலம் மேலிருந்து உடல் முழுவதும் தாரையாக விடுதலும், இந்த சிகிச்சை செய்யும் தறுவாயில் தலையில் க்ஷீரபலா, பலாகுடூச்யாதி, கார்பாஸாஸ்த்யாதி போன்ற தைலங்களில் ஒன்றிரண்டை வெதுவெதுப்பாக பொதிந்து வைத்தலும் நல்ல சிகிச்சைமுறையாகும்.

தைலதாரை சிகிச்சை முடியும் தறுவாயில் பஞ்சமாம்ஸம் எனப்படும் ஒரு கிழிவைத்தியம் செய்வது அக்காலத்திய வழக்கம். உடும்பு, கோழி, ஆடு, பன்றி, முயல் ஆகியவற்றின் மாமிசத்தை நன்றாக வேகவைத்து சிற்றாமுட்டி வேர் கஷாயம் மற்றும் பாலுடன் கலந்து மூட்டை கட்டி வெதுவெதுப்பாக உடலெங்கும் ஒத்தடம் கொடுத்தல் அல்லது தேய்த்து விடுதல் எனும் சிகிச்சைமுறை மேற்குறிப்பிட்ட தைலதாரைக்குப் பிறகு செய்வதால், உடலில் நெய்ப்பானது மறுபடியும் உருவாவதற்கு வாய்ப்பினை அது ஏற்படுத்தித் தரும். வாயுவினுடைய வறட்சி மற்றும் குளிர்ச்சி எனும் தன்மையானது நாடிநரம்புகளிலிருந்து விடுபடும்.

உணவில் வாயுவை அடக்கக் கூடிய, நரம்புகளுக்கு வலுவூட்டக் கூடிய இனிப்பு, புளிப்பு மற்றும் உப்புச்சுவைகளை தங்களுடைய குடல் தன்மைக்கு ஏற்ப மிதமான அளவில் சேர்ப்பதும், வாயுவின் சீற்றத்தை அதிகரிக்கக் கூடியதும், உட்புற தாதுக்களின் நெய்ப்பைக் குறைத்து வறட்சியை ஏற்படுத்தும் சுவைகளான காரம், கசப்பு மற்றும் துவர்ப்புச் சுவைகளை உணவில் குறைப்பதும் மேற்சொன்ன உடல் சிரமங்களை பெருமளவு குறைத்திடச் செய்யும்.

வயோதிகத்தில் உடற்பயிற்சி செய்வதென்பது எல்லோராலும் சாதிக்கக் கூடியதல்ல. அதனால் தொலைக்காட்சியில் காட்டப்படும் உடற்பயிற்சி, மருத்துவருடைய ஆலோசனைகளையும் கேட்டு அவை ஏற்படுத்தும் தாக்கத்தினால் ஈர்க்கப்பட்டு அதிக நடைபயிற்சி செய்வது, உடற்பயிற்சி செய்வது போன்றவை வயோதிகர்களால் தவிர்க்கப்படவேண்டியவை.

நிறைய ஓய்வு, அது பகலாகட்டும் அல்லது இரவாகட்டும் வயோதிகத்தில் மிகவும் அவசியம். மனதை குடும்பப் பந்தத்துடன் இணைத்து அதன்மூலம் ஏற்படும் மனவருத்தம், பதற்றம் அவற்றை நீக்க முற்பட செய்யும் முயற்சிகள் போன்றவை உடல் உபாதைகளுடன் மனஉபாதைகளையும் அதிகரிக்கச் செய்யும்.

அதனால் மனதை ஒருநிலைப்படுத்தும் தியானப்பயிற்சி, மனதினுடைய சாந்தம், மனதிற்கு இன்பம் தரும் நண்பர்களுடைய சேர்க்கை ஆகியவையே நீண்ட இன்பத்தைத் தரும் விஷயங்களாகும்.

நல்லோர் சேர்க்கை, இன்சொல், காருண்யம், பிறர் மனமறிந்து அவர்களுக்கு சுகம் ஏற்படும் வகையில் நடப்பது போன்றவை மறைமுகமான உடல் நெய்ப்பிற்கும், வாயுவினுடைய வறட்சியைப் போக்குவதற்கும் ஏற்புடைய செயல்களாகும்.

ஆயுர்வேத மருந்துகளாகிய ச்யவனப்ராஸம், அஸ்வகந்தாதி லேஹ்யம், விதார்யாதி க்ருதம், அப்ரக பஸ்மம், தான்வந்தரம் குளிகை, தசமூலாரிஷ்டம், அஸ்வகந்தாரிஷ்டம், அமுக்கரா சூரணம், இந்துகாந்தம் பால் கஷாயம், சுகுமார ரஸாயனம், ஸ்வர்ண பஸ்மம், வெள்ளி பற்பம், அயஸ்ஸிந்தூரம் போன்ற உட்புற மருந்துகள் வயோதிகத்தில் சாப்பிடத் தகுந்தவை.

மருத்துவருடைய ஆலோசனையின் பேரில் இவற்றில் எது உங்களுக்கு பொருத்தமானவையோ அவை பற்றிய விபரம் நன்கறிந்து குடலிலுள்ள பசித்தீயின் தன்மைக்கேற்ப கால அளவை நிர்ணயம் செய்து சாப்பிட்டால் எலும்புகளின் வலுவான தன்மை, நரம்புகளின் வலு, பூட்டுகளில் தேவைப்படும் நெய்ப்பு ஆகியவற்றை உங்களால் மறுபடியும் பெறமுடியும்.

# ஊழல் மோசடி ஒழிப்பில் கணக்காய்வு துறை முக்கிய பங்கு

## ஜனாதிபதி பாராட்டு



(கொழும்பு)

ஊழல் மற்றும் மோசடிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் கணக காய்வுத்துறை முக்கிய பங்கை வகித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள் ளார்.

கொழும்பில் நடைபெற்ற சர் வதேச முகாமைத்துவ கணக் காய்வாளர்களின் மாநாட்டின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்தக் கருத் துக்களை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் சிறந்த நிதி ஒழுக் கத்தையும் நிதி முகாமைத்துவத் தையும் பேணிச் செல்வதற்காக கணக்காய்வாளர்கள் தமது பொறுப்பை சரிவர நிறைவேற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச துறையில் சிறந்த நிதி ஒழுக்கம் மற்றும் நிதி முகா மைத்துவத்தை ஏற்படுத்தி நாட் டின் அபிவிருத்திக்கு கிடைக்கும் நிதி உதவிகள் மற்றும் நன் கொடைகளை பயனுள்ள வகை யில் பயன்படுத்துவதே அரசாங் கத்தின் நோக்கம் ஆகும்.

கணக்காய்வு சட்டம் தொடர் பில் புதிய நாடாளுமன்றத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

ஏழு வருடங்களின் பின்னர் டெங்கு நோயாளர்களின் எண் ணிக்கை குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலத்தில் 7000 டெங்கு நோயா ளர்கள் பதிவாகியுள்ளதுடன் அவர்களில் 32 பேர் உயிரிழந்துள் ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவு குறிப் பிட்டுள்ளது.

டெங்கு நோயாளர் மரணம் 32 வீதத்தால் குறைவடைந் துள்ளதாக தொற்று நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் பபா பலிஹவடன கூறியுள்ளார்.

# தரம்குறைந்த எரிபொருளால் பலபேருந்துகளில் பழுது

## சுசிலுக்கு எதிராக கெமுனு முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் கனியவளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த விற்கு எதிராக முறைப்பாடு செய் வதற்காக பொலிஸ் விசேட நிதி மோசடி விசாரணைப் பிரி விற்கு செல்லவுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையா ளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம இடம்பெற்ற ஊடக சந்திப்பி லேயே கெமுனு விஜேரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுசில் பிரேமஜயந்த கனிய வளத்துறை அமைச்சராக இருந்த போது இறக்குமதி செய்த தரம் குறைந்த எரிபொருள் காரண மாக அப்போது பல பேருந்து கள் பழுதடைந்தன.

பேருந்துகள் பழுதடைந்ததன் காரணத்தால் தமக்கு 22 இலட் சத்து மூவாயிரத்து 64 ரூபா செலவு ஏற்பட்டுள்ளது.

தமக்கு ஏற்பட்ட நஷ்டத்தை நிவர்த்தி செய்து கொள்ளவதற் காக அப்போது அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

பேச்சு வாரத்தையின் பின்னர் கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வழங்கியிருந் தேன்.

எனினும் அந்த விடயம் தொடர்பில் எந்தவித நடவடிக் கையும் எடுக்கவில்லை. விசா ரணை மேற்கொண்டு தமக்கு நியாயம் வழங்குமாறும் கோரி



பொலிஸ் விசேட நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப் பாடு செய்யவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த காலப் பகுதியில் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க மற்றும் பலரது வாக னங்கள் பழுதடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமற் போனோர் விசாரணையில் 5 பேர் கொண்ட அதிபர் ஆணைக்குழு

காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற் கொள்வதற்கு, ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவொன்று நிய மிக்கப்பட்டுள்ளதாக, காணாமற்போனவர்கள் தொடர்பான அதிபர் ஆணைக்குழு அறிவித்துள்ளது. காணாமற்போனவர்கள் தொடர்பாக அவர்களின் உறவினர்கள், ஆணைக்குழுவின் அமர்வுகளில் வாய்மூலம் அளித்த சாட்சியங்களின் அடிப்படையிலேயே, மூத்த அனுபவம்மிக்க அதிகாரிகளைக் கொண்ட இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட, மேலதிகமாக ஆழமாக விசாரிக்கப்பட வேண்டிய சம்ப வங்கள் தொடர்பாகவே, இந்த விசாரணைக்குழு விசாரிக்கவுள்ளது.

ஓய்வுபெற்ற நீதிச்சேவை அதிகாரி இந்த விசாரணைகளை மேற்பார்வை செய்வார் என்றும், காணாமற்போனவர்கள் தொடர் பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலர் தெரிவித்துள்ளார்.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ ஏற்பாடுகள்

அடுத்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள யாழ்.நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வரு டாந்த மஹோற்சவத்தின் ஏற் பாடுகள் தொடர்பாக ஆராயும் முதற்கட்ட கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணததில நேற்றுமுன் தினம் நடைபெற்றது.



யாழ்.மாநகரசபை ஆணை யாளர் பிரணவநாதன் தலைமை யில் மாநகர சபை மாநாட்டு மண் டபத்தில் நடைபெற்ற இக்கலந் துரையாடலில் ஆலய மஹோற் சவத்தை சிறப்பாக நடாத்துவ தற்கு மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குகள் தொடர்பாக துறை சார்ந்தவர்களுடன் கலந்துரை யாடப்பட்டது.

குறிப்பாக திருவிழாக்காலங் களில் ஆலயச் சூழலில் மேற் கொள்ளப்பட வேண்டிய அடிப் படை வசதிகள், சுகாதார ஏற் பாடுகள் மற்றும் பாதுகாப்பு ஏற் பாடுகள் தொடர்பாகவும் கலந் தாலோசிக்கப்பட்டது.

ஆலயத்திற்கு வரும் பக்தர் கள் குறிப்பாக பெண்கள் அணி யும் ஆடைகளில் கலாசார ஆடை களை அணிந்துவர ஏதுவாக அவர்கள் அறிவுறுத்தப்படவுள்ள துடன் ஆலய சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கான ஏற்பாடு களை இம்முறையும் மாநகர சபையினர் சிறப்பாக முன்னெடுப் பார்களென மாநகர சபை ஆணை யாளர் பிரணவநாதன் தெரிவித்தார்.

நல்லை ஆதீன குருமுதல் வர் சோமசுந்தர பரமாச்சாரியர் மற்றும் யாழ்.பிராந்திய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எவ்.யூ. வூட்லர் மற்றும் ஆலய பரிபா லன சபையினர் சுகாதாரப் பிரி வினர் சைவ மஹா சபையினர் மற்றும் வர்த்தக சங்கத்தினர் உள்ளிட்ட பலரும் இக்கலந்துரை யாடலில் கலந்துகொண்டு திரு விழாவிற்கான தமது ஆலோசனை கள் தொடர்பாக கருத்து தெரிவித்தனர்.

# இனவாதப் பரப்புரையில் சரத் என்.சில்வா


(கொழும்பு)

தமிழர் ஒருவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்து நாட்டின் பொருளாதாரத்தை ஒழிக்க, முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக, இனவாதப் பரப்புரையில் இறங்கியுள்ளார் முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என்.சில்வா.

மாத்தளை மாவட்டத்தில் உள்ள நாவுல பகுதியில் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பரப்புரைக் கூட் டத்தில் உரையாற்றிய சரத் என் சில்வா,

"மத்திய வங்கியை குண்டுத் தாக்குதலில் அழித்து நாட்டின் பொருளாதாரத்தை ஒழிக்க அன்று விடுதலைப் புலிகள் முற்பட்டனர்.

இன்று புலம்பெயர் தமிழர் கள் ரணில் விக்கிரமசிங்க



ஊடாக, தமிழர் ஒருவரை மத்திய ஆளுநராக நியமித்து நாட்டின் பொருளாதாரத்தை ஒழிக்க முற் பட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க இன்று விடுதலைப் புலிகளின் தேவைக் கேற்ப செயற்படுகிறார்." என்றும அவர் குற்றம் சாட்டினார்.










வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................
முகவரி :- ........................................
பிறந்த ஆண்டு :- ........................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................
பெற்றோர் கையொப்பம்

21.  அருகில் தரப்பட்டுள்ள உருவில் சமச்சீர் அச்சுக்களை வரையுங்கள்

22. எதிரே தரப்பட்டுள்ள தள உருக்களைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய திண்ம உருவின் பெயர் என்ன?



......................................................................

23. 31,070 என்பதை சொற்களில் எழுதுங்கள்

......................................................................

24. ஒரு குளிர்பானப் போத்தல் மூலம் 15 பேரை உபசரிக்கலாம் விருந்தொன்றுக்கு 155 விருந்தினர்கள் வருகை தந்தால் அவர்களை உபசரிக்க எத்தனை குளிர்பானப் போத்தல்கள் தேவைப்படும்?

......................................................................

25. ஒருவரின் வயதைக் கேட்டபோது அவர் பின்வருமாறு கூறினார். எனது வயதின் இரு இலக்கங்களையும் கூட்டும் போது 5 வரும் அந்த இரு இலக்கங்களையும் இடம் மாற்றி எழுதினால் எனது வயதை விட 11 அதிகமாகும் எனக் கூறுவார் குறித்த நபரின் வயது எதுவாக இருக்கக் கூடும்?

......................................................................

26. லீற்றர் 350மில்லிலீற்றர் கொள்ளளவுடைய பாத்திரமொன்றை 50 மில்லிலீற்றர் பாத்திரம் ஒன்றினால் நிரப்புவதற்கு எத்தனை தடவைகள் நீரை ஊற்ற வேண்டும்?

......................................................................

(03) பின்வரும் பந்தியை வாசிக்க

ராஜாவும், அவனது தங்கையும் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கும் போது, பாதையின் ...புறத்தில் மிக வேகமாக, வந்த மகிழுர்ந்து இருவரினதும் ஆடையில் சோற்றை இறைத்து வீட்டுச்சென்ற ..........

நீர் தான் ராஜா எனின் இச்சந்தர்ப்பத்தில் உமக்கு ஏற்படும் உணர்வுகளை வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான வாக்கியங்கள் ஆறு எழுதுக (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெற வேண்டும் வாக்கியங்களின் இலக்கணத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)

### நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

(01) 01. சிங்கம் 02. பதுங்கி நின்றது 03. நகத்தினாலும் பல்லாலும் (கோரப்பல்லாலும்)
04. தேசியக்கொடியில் இடம்பெற்றுள்ளமையால் 05. காடு (02) 01. தலை,விலங்கு
02. முகம் (03) 01. பருத்த 02. கறுத்த, இடித்த
(04) 01. அல்லும் பகலும் (05) 01. உணவு 02. சிரசு 03. வதனம்
(06) 01. Flower 02. Fruit 03. Leave 04. Root
(07) 01 - 10 வரை பொருத்தமானதை எழுதுக (08) 01. 244.50 02.60.00 03. 18.75
04. 300.00 05. 2.50 நட்டம் 07. 3kg 100g (09) 01. முட்டை 02. குடம்பி
03. கூட்டுப்புழு 04. நிறையுடலி 05. சூரியஒளி மூலம் 06. குடம்பி
07. மயிர்க்கொட்டி 08. தும்பிக்கை 09. பூக்களின் மகரந்த சேர்க்கைக்கு உதவுதல்
(10) 01. சரி 02. சரி 03. சரி 04. பிழை 05. பிழை 06. பிழை
07. சரி 08. பிழை (11) 01. சாந்து அகப்பை 02. நுனுக்குக்காட்டி
03. வயலின் 04. மண்வெட்டி 05. நங்கூரம் 06. நாதஸ்வரம் (12) 01. 1 02. 3
03. 2 04. 1 05. 2 06. 1 07. 1 08. 1 09. 2 10. 1
11. 2 (13) 01 - 06 வரை விரும்பிய வசனம்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) பின்வரும் நாடகத்தின் ஒரு பகுதியை வாசியுங்கள்

குமணன் : நற்றமிழ் புலவரே! தமிழ் வளர்க்கும் தங்கள் வாழ்க்கையில் வறுமையா?

புலவர் : ஆம், அரசே வறுமையால் வாடும் என் குடும்பத்தின் அவலத்தை எவ்வாறு உரைப்பேன்? பசியால் ஊன் வற்றி உடல் மெலிந்து உருக்குலைந்து போனாள். என் மனைவி ஆடிப்பாடி மகிழ வேண்டிய என் அருமை மகளோ குரல் எடுத்து அழவும் சக்தியற்றுக் கிடக்கிறாள். அருமைத் தாயின் முகம் பார்த்து பசியால் அழுகிறது பச்சிளங்குழந்தை அவளோ பாலில்லாததால் பால் நிலாவைக் காட்டித் தானும் அழுகின்றாள். ஒரு வேளை உணவுக்கு குப்பைக் கீரைகளையாவது சமைக்கலாம் என்றாலோ உப்பிற்கும் வழியில்லை

குமணன் : போதும் புலவரே! போதும்! தங்கள் நிலை கேட்டு என் மனம் துடிக்கிறது யாது வேண்டும்? தயக்கமின்றிக் கேளும் ................ தமிழ்ப் புலவர்களின் வாழ்வை அழித்து வரும் வறுமையே இனி இக்குமணனின் உயிர் உள்ளவரை வாழ்க்கையை சீரழிக்க உன்னை அனுமதிக்க மாட்டேன்

புலவர் : அரசே! அல்லல்படும் என் இல்லாளின் இதயம் மகிழ வேண்டும் உன்னிடத்தில் யான் பெறும் செல்வத்தை களிற்றின் மீது ஏற்றிச் செல்ல வேண்டும் அதைக் காண்போர் எல்லாம் வியக்க வேண்டும் என் பிள்ளைகளும் அழுகையை மறக்க வேண்டும் வள்ளலே! அது மட்டுமன்றிப் புலவர்களுக்குப் பரிசில் நல்காத வேந்தர்கள் உன் கொடைத்திறன் அறிந்து வெட்கித்தலை குனிய வேண்டும் இதுதான் என் பேரவா

01. புலவர்களின் பிரதான தொழில் யாதென விபரிக்கப்படுகிறது? ..............................

02. புலவர், மன்னரிடம் எதை எதிர்பார்க்கின்றார்? ..............................

03. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்தைத் தரும் சொற்களை எழுதுங்கள்
(அ) அல்லல் .............................. (ஆ) ஊன் ..............................

04. பின்வரும் சொற்களுக்கு எதிர்கருத்தைத் தரும் சொற்களை எழுதுங்கள்
(அ) வறுமை .............................. (ஆ) அவலம் ..............................

05. இப்பந்தியில் வரும் பிராணியின் பெயர் என்ன? ..............................

06. பின்வரும் சொற்களை விரித்தெழுதுங்கள்
(அ) நற்றமிழ் .............................. (ஆ) உருக்குலைந்து ..............................

07. “வள்ளல்” என்றால் என்ன என்பதை எழுதுங்கள்? ..............................

08. தமிழ்ப்புலவர்களின் வாழ்வை அழித்து வருவது எது? ..............................

09. என் குடும்பத்தின் அவலத்தை எப்படி உரைப்பேன்? என்பதை பன்மை வாக்கியமாக எழுதுங்கள்
..............................

10. இப் பந்தியில் வரும் பெயர் அடைமொழிச் சொற்கள் நான்கு எழுதுக ..............................

(02) பின்வரும் பந்தியில் தரப்பட்டுள்ள பல்வேறு விபரங்களை வாசித்து, சுய விபரப் படிவத்தை நிரப்புங்கள்

மட்டக்களப்பு நகரின் மத்தியில் அமைந்துள்ள மெதடிஸ்த மத்திய கல்லூரியில் தரம் 5 இல் சனுஜன் கல்வி கற்கின்றான் தந்தையாரான கிருஷ்ணன் மாநகர சபையில் பொறியியலாளராக பணி புரிகின்றார். தாயாரான மணிமேகலை குடும்பத்தைக் கவனித்துக் கொண்டு மட்டக்களப்பிலுள்ள திருமலை வீதியில் 15ஆம் இலக்க வீட்டில் இருக்கின்றார். சனுஜனுக்கு ... விளையாட்டிலும் ஒரு தங்கையும், ஒரு அக்காவும், ஒரு அண்ணனும் உண்டு சனுஜனுக்கு படிப்பில் மட்டுமன்றி விளையாட்டிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு இவன் கபடி விளையாட்டில் சிறந்து விளங்கினான் இவனது இலட்சியம் எதிர்காலத்தில் வைத்தியராகி ஏழை மக்களுக்கு வைத்தியம் செய்வதேயாகும்

01. முழுப்பெயர் : ......................................................................
02. விலாசம் : ......................................................................
03. பாடசாலை : ......................................................................
04. படிக்கும் தரம் : ......................................................................
05. தகப்பனின் தொழில் : ......................................................................
06. தாயின் தொழில் : ......................................................................
07. குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் தொகை : ......................................................................
08. விருப்பமான விளையாட்டு : ......................................................................
09. எதிர்கால இலட்சியம் : ......................................................................

**(03) வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க**

01. We buy ............................................. from the market, (medicine, petrol, fish, Books)
02. We buy ............................................. from the Book shop, (fruits,pencil, fish,stamps)

**(04) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக**

01. Happy new year ......................................................................
02. Please sitdown ......................................................................

**(05) பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக**

01. அ(ப்)பி பாசல(ட்)ட யமு ......................................................................
02. அய்யா கடே(ட்) ட (G) கியா ......................................................................

**(06) பின்வருவன சிங்களத்தில் கூறப்படுவதை தமிழில் எழுதுக**

01. தேங்காய் என்ன விலை? ......................................................................
02. நான் பாடம் படிக்கின்றேன் ......................................................................

**(07) 01 தொடக்கம் 26 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக**

01. வேறுபட்ட இலையை உடைய தாவரம் எது?
01) பூவரசு 02) வேலிப்பருத்தி 03) அரசு 04) மிளகு

02. மலைநாட்டில் பயிரிடும் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பிராணி எது?
01) செண்பகம் 02) நத்தை 03) தேள் 04) அட்டை

03. இலங்கைக்கே உரித்தான விலங்கு எது?
01) மயில் 02) கழுகு 03) பச்சைப்பாம்பு 04) மலைப்பாம்பு

04. வருடத்தின் ஒரு குறித்த காலப்பகுதியில் மட்டும் பூத்துக் காய்க்கும் தாவரம் எது?
01) பப்பாசி 02) வாழை 03) மா 04) வீளிம்பி

05. கடற்கரைப் பிரதேசத்தில் வளரும் தாழை மரங்கள் காற்றினால் சரிந்து விழுவதைத் தடுக்க அவற்றில் காணப்படும் விசேட அம்சம் எது?
01) ஆழமான வேர்த்தொகுதியைக் கொண்டிருத்தல் 02) மிண்டி வேரைக் கொண்டிருத்தல்
03) உறுதியான வேர்த்தொகுதி காணப்படுதல் 04) மரங்கள் குட்டையாக வளருதல்

06. சிவப்பு எறும்பு , சுட்டெறும்பு என்பன காலில் கடித்தால் உடனடியாகச் செய்யும் முதலுதவி யாது?
01) காலை நீரினால் நன்றாக கழுவுதல்
02) காலில் உடனடியாகச் மருந்தை தடவுதல்
03) காலிலுள்ள எறும்புகளை தட்டிவிடுத்தல்
04) உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லல்

07. மலைநாட்டுப் பகுதியில் வாழும் மக்கள் கை, கால்களில் அட்டைகள் கடிக்காதிருக்க உடலில் பூசிக்கொள்ளும் பதார்த்தம் எது?
01) சவர்க்காரம் 02) சுண்ணாம்பு 03) உப்பு 04) உடல்பூச்சி

08. சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகிய மூன்று வர்ணங்களையும் கலக்கும் போது தோன்றும் நிறம் என்ன?
01) பச்சை 02) ஊதா 03) கபிலம் 04) கறுப்பு

09. அதிகளவு விற்றமின் C யைக் கொண்ட பழவகை எது?
01) மாமுந்திரி 02) மாம்பழம் 03) வாழைப்பழம் 04) பலாப்பழம்

10. பாடசாலையொன்றில் திடீர் விபத்து ஏற்பட்டவுடன் முதலில் அறிவிக்க வேண்டிய இடம் எது?
01) தீயணைப்பு நிலையம் 02) பொலிஸ் நிலையம்
03) கல்வி அலுவலகம் 04) பிரதேச செயலகம்

11. ஒரு குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு வெள்ள அபாயம் பற்றி எச்சரிக்கை விடுத்து அவர்களை உடனடியாக பாதுகாப்பான இடத்திற்கு செல்லும்படி அறிவிக்க பொருத்தமான தகவல் தொடர்புச்சாதனம் எது?
01) வானொலி 02) தொலைக்காட்சி 03) ஒலிபெருக்கி 04) தொலைபேசி


12.


அருகிலுள்ள ஓவியம் இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியங்களுக்கு நிகரானவை இவற்றை வரைவித்த மன்னர் யார்?
01) மகாசேனன் 02) தாதுசேனன்
03) காசியப்பன் 04) எல்லாளன்

13. இலங்கையில் பண்டைய வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் நூல் எது?
01) திரிபிடகம் 02) மணிமேகலை 03) மகாவம்சம் 04) தேவிவம்சம்

14. இலங்கையில் தென்பகுதியில் வாழும் மக்களுக்கு நுளம்புகளால் பரப்பப்படும் பிரதான நோய் எது?
01) டெங்கு 02) ஆனைக்கால் 03) மலேரியா 04) சிக்கன்குனியா

15. லொறி ஒன்றினுள் பீப்பாய் ஒன்றினை மிக இலகுவாக ஏற்றுவதற்கு சாய்தளப்பலகையை வைக்க வேண்டிய விதம் எது?


(1) (2) (3) (4)


16. மஞ்சள் நிற காய்கறி, பழவகைகளை உணவில் போதியளவு சேர்த்துக் கொள்வதால் எந்த நோய் வராது பாதுகாத்துக் கொள்ளலாம்?
01) ஸ்கேவி 02) என்புருக்கி 03) மாலைக்கண் 04) பிடிசுரம்

17. இலங்கை வாழ் மக்களின் விழாக்காலங்களில் மேள வாத்தியங்களுடன் பயன்படுத்தப்படும் இசைக்கருவி எது?
01) புல்லாங்குழல் 02) சங்கு 03) மணி 04) நாதஸ்வரம்

18. மாணிக்க கங்கைக்கு அருகில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற வணக்கஸ்தலம் எது?
01) கதிர்காமக்கந்தன் கோவில் 02) பாலாவி முருகன் கோவில்
03) தூபாராம விகாரை 04) பள்ளிவாசல்

19. ஜனவரி மாதம் 20ஆம் திகதி பௌர்ணமி தினம் எனின், படத்திலுள்ளவாறு சந்திரன் தோன்றும் திகதி எது?
01) ஜனவரி 28
02) பெப்ரவரி 4
03) ஜனவரி 31
04) பெப்ரவரி 7



20. நாளாந்த வாழ்வில் காந்தம் பயன்படும் சந்தர்ப்பம் அல்லாதது எது?
01) அலுமாரி, குளிரேற்றிகளின் கதவுகளில் காணப்படும்
02) ஒலிபெருக்கி, திசைகாட்டிகளில் பயன்படும்
03) வானொலி, சோற்றுப்பெட்டிகளில் காணப்படும்
04) மின்மோட்டார், டைனமோக்களில் காணப்படும்

# தேர்தல் களம் 2015

## மக்கள் சுய கௌரவத்துடன் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும்

### முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா

எமது மக்கள் சுய கௌரவத்துடன் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.தலைமையலுவலகத்தில் யாழ். நகரப்பகுதியிலுள்ள வர்த்தகர்களின் ஒரு தொகுதியினரை நேற்று சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீண்ட கால யுத்தத்தினால் எமது மக்கள் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்புக்களை சந்தித்திருந்தனர். அதுமட்டுமன்றி மாணவர்களின் கல்விநிலையும் பாரிய வீழ்ச்சி கண்டிருந்தது.

இந்நிலையில் மக்கள் வாழ்வாதாரத்திலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் காண வேண்டும்.

இதேபோன்றுதான் கல்வித்துறையையும் மற்றும் விளையாட்டுத்துறையையும் மேம்படுத்தி அதனூடாக வளமானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

எனவே நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் எமக்கான ஆணையை அதிகளவில் தரும்பட்சத்தில் நாம் மேலும் அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

அதனடிப்படையில் தான் யாழ்.நகரப் பகுதியில் குறிப்பிட்ட சில இடங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வர்த்தக நிலையங்களை வர்த்தகர்களிடம் கையளித்தோம்.எனவே, இவ்வாறு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பங்களையும் வாய்ப்புக்களையும் எமது மக்களுக்காக நாம் சிறப்பான முறையில செயற்படுத்தியுள்ளோம் என்றும் சுட்டிக்காட்டினார்.



தீவகத்தின் அனலைதீவிற்கு விஜயம் மேற்கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாள்ருமான் டக்ளஸ் தேவானந்தா அனலைதீவு ஐயனார் கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தின் சிறப்புப் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார். இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட் பாளருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) உடனிருந்தார்.

## கோப்பாய் தொகுதியில் தேர்தல் பரப்புரை



கோப்பாய் தொகுதிக்கான தேர்தல் பரப்புரையை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்தார்.

கோப்பாய் தேர்தல் தொகு திக்கு கடந்த 26 ஆம் திகதி விஜயம் செய்திருந்த செயலாளர் நாயகம் பல்வேறு கிராமங் களுக்கும் சென்றிருந்தார்.

முன்னதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தொகுதி செயற்பாட்டாளர்களை சந்தித்து கலந்துரையாடியதை அடுத்து நீர்வேலி வடக்கு பன்னாலை, புத் தூர் கிழக்கு புத்தூர், வாதர வத்தை புத்தூர், ஆவரங்கால் கிழக்கு புத்தூர், பத்தமேனி அச்சுவேலி, வளலாய் அச்சுவேலி, நவக்கிரி புத்தூர், ஆவரங்கால் மேற்கு புத்தூர், புத்தூர் வடக்கு ஆகிய கிராமங் களுக்கு செயலாளர் நாயகமும் முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தேர்தல் சூறாவளிப் பரப்புரையில் ஈடுபட்டார்.

இதன்போது அந்த அந்த கிராம மக்களின் தேவைப்பாடுகள் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட செயலாளர் நாயகம் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் எனத்தெரிவித்திருந்தார்.

குறிப்பாக குறித்த கிராமங் களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அவற்றுக்கான திட்டங்களை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே ஆவரங்கால் கிழக்கு எவரெஸ்ட் விளை யாட்டுக் கழக மைதானத்திற்குச் சென்று விளையாட்டு வீரர்களுடனும் கலந்துரையாடி இருந்தார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகிழக்கு பிரதேச அமைப்பாளரும், வேட்பாளருமான இராமநாதன் ஜங்கரன் உடனிருந்தார்.

## யாழ்.மாவட்ட நலன்புரி முகாம்களின் தேவைகள் குறித்து ஆராய்வு

ஈழ மக்கள் ஜனநாயகக் கட் சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தாவை யாழ். மாவட்ட நலன்புரி முகாம்களின் பிரதிநிதிகள் சந்தித்து தமது தேவைப்பாடுகள் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவல கத்தில் இச்சந்திப்பு கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்றது.

நலன்புரி முகாம்களில் வாழும் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றுவதில் உள்ள இடர்பாடு களை தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் மீள்குடியேற்றம் செய்யப்படும் வரையில் அல்லது மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரையில் அந்த மக்களுக்கு நிவாரணம் கிடைக்கச் செய்தல் தற்போது அவர்கள் வாழ்ந்து வரும் காணிகளை கொள்வனவு செய்து அங்கு அந்த மக்களை மீள் குடியேற்றம் செய்வது உள் ளிட்ட விடயங்கள் தொடர்பாக



விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதனிடையே குறித்த முகாம்களில் வாழும் மக்களது அடிப்படைத் தேவைகள் தொடர்பில் குறிப்பாக குடிநீர், மின்சாரம், குடியிருப்புக்களின் திருத்தம் உள்ளிட்ட விடயங்கள் தொடர் பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பலாலி, மயிலிட்டி, தையிட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நலன்புரி முகாம்களில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இச் சந்திப்பில் மாவட்டத்தின் 24 நலன்புரி முகாம்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.


**நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015**



**சிவகுரு பாலகிருஷ்ணன்**

(ஈ.பி.டி.பி. வலிகாமம் மேற்கு இணைப்பாளர்)




**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

## வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வோம்!








## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# தேர்தல் வன்முறை நேற்றுவரை 170 பேர் கைது

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நாளிலிருந்து நேற்று வரை தேர்தல் சட்டங்களை மீறிய 170 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட 89 சுற்றிவளைப்புகளின்போது இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார். அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

சட்டவிரோதமான முறையில் சுவரொட்டிகளை ஒட்டுதல், சட்டவிரோதமாக பேரணிகளை நடத்தியமை, வேட்பாளர் பயணிக்காத வாகனங்களில் அவரது படங்களை பயணிக்காத வாகனங்களில் அவரது படங்களை காட்சிப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் அதிகபட்சமாக 21 சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை பொதுத் தேர்தல் சம்பந்தப்பட்ட 64 தேர்தல் வன்முறை முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, இவற்றில் தொடர்புடைய 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக அம்பாந்தோட்டை, தங்காலை பிரதேசத்திலிருந்தே 9 தேர்தல் வன்முறைச் சம்பவ முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றார்.

# முழுமையான நல்லிணக்கம் வட கிழக்கில் இன்னும் இல்லை

## துன்புறுத்தல் தொடர்பாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு தமிழர்கள் திட்டமிட்டு தண்டிக்கப்படும் செயற்பாடுகள் தொடர்வதாக சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டத்தின் சார்பாக, தென்னாபிரிக்க மனித உரிமைகள் அறக்கட்டளை மூலம் நிர்வகிக்கப்படும், ஒரு திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

சித்திரவதைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் சட்டவிரோத கைதுகள் மற்றும் கொலைகள் திட்ட மிட்ட வகையில் தமிழர்கள் மீது அரச அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையின் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராயும் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவில் அங்கம் வகிக்கும் யஸ்மின் சூகா (Yasmin Sooka) இந்த திட்டத்தை செயற்படுத்துகின்றார்.

இலங்கையில் திட்டமிட்ட வகையில் தமிழ் இனச் சமூகம் துன்புறுத்தப்படுவதாகவும் தண்டிக் கப்படுவதாகவும், அவர் செய்த ஆய்வின் முடிவில் வெளியிட்டுள்ள இன்னும் முடிவடையாத போர் என்ற தலைப்பிலான அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை பாலியல் வன்முறைகள், தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல் தொடர்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னரும் திட்டமிட்ட வகையில் தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர், அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் படைத்தரப்பினர் இந்த நடவடிக்கைகளை திட்டமிட்டவகையில் செயற்படுத்தி வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் இரகசிய முகாம்கள் உள்ளடங்கலாக, 41 முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் பாலியல் ரீதியாகவும் வேறு வழிகளிலும் துன்புறுத்தப்படுவதாக தெரிவித்துள்ள அவர், இது ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னரும் தொடர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை இரகசிய கடற்படை புலனாய்வு முகாமின் செயற்பாடுகள், அங்கு சித்திரவதை மற்றும் துன்புறுத்தல்களை எதிர்நோக்குவோர் மற்றும் அவற்றை செயற்படுத்தும் நபர்கள் தொடர்பிலான புகைப்படங்கள் ஜீ.பி.எஸ். (GPS) தொழில்நுட்பத்துடன் திரட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வவுனியா ஜோசப் முகாம் இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் வெள்ளை வான் கடத்தலில் ஈடுபடுவோர் மற்றும் சித்திரவதைக்கு உள்ளாக்குவோர் தொடர்பிலான தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், நாட்டின் ஏனைய பாகங்களிலும் துன்புறுத்தல் மற்றும் சித்திரவதைக்கு உள்ளாக்கியவர்கள் தொடர்பிலான புகைப்படங்களும், அவர்களது பெயர்களும் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சித்திரவதைகளுக்கு உள்ளாகி வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற 155 பேரின் நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பாதிக்கும் மேற்பட்டோரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அவர்கள் கடுமையான துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதோடு, பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்வதாகவும் அவர்கள் தமது அடிப்படை உரிமைகளை கூட அனுபவிக்க முடியாத வர்களாக இருப்பதாகவும், இது தற்போதும் தொடர்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் எனவும். யஸ்மீன் சூகா தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆகியவற்றிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூரில்...

மென வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. முற்பகல் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டமானது, தொடர்ந்து நண்பகல் வரை முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட உறவினர்கள் நல்லூர் கந்தனே எனது அப்பாவை மீட்டுத் தருவாயா? தேர்தல் காலத்தில் மட்டுமா நாமும் மற்றவர்களுக்கு சமமாக தெரிகின்றோம், எம்மிடம் வாக்குப் பிச்சை கேட்பவர்களே எமது கண்ணீர் உங்களுக்கு தெரியவில்லையா போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் காணாமற்போனோரின் உறவினர்கள் சமூக அமைப்புக்கள் கலந்து கொண்டு உணர்வுபூர்வமாக முன்னெடுத்திருந்தனர்.

## பொருளாதார...

மற்றும் மக்களது வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பது, விளையாட்டு, சுகாதாரம், உள்ளிட்ட துறைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் விசேடகவனம் செலுத்தப்படும். அதுமட்டுமன்றி தரிசு நிலங்களாக காணப்படும் நிலங்களை பயிர்செய் நிலங்களாக மாற்றியமைப்பதற்கும் எம்மிடம் தீர்மானங்கள் உள்ளன.

இவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு மக்கள் முழுமையான ஆதரவு பலத்தை எமக்கு தரும்பட்சத்திலேயே இவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியும். சரியான அரசியல் கொள்கைத்திட்டம் உள்ள எமக்கு மக்கள் வாக்களிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஐங்கரன் ஆகியோர் உடனிருந்தனர். இதனிடையே இருபாலை விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தில் அந்தப் பகுதி மக்களுடனும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

## பிள்ளை...

நிலையில் அவர்களை விரைவாக கண்டுபிடித்து தாருங்கள் அவர்களை கைது செய்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்பது எமக்கு அவசியம் இல்லை.

எமக்கு எமது பிள்ளைகள் தான் வேண்டும். தற்போது மனிதப் புதைகுழிகள் தோண்டப்படுகின்றன. மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இவை எமது பிள்ளைகளுடையதா? என எமது மனம் குமுறுகிறது. எமது பிள்ளைகளின் நிலையை அறிய நாம் மிக ஆவலாகவும், கவலையுடனும் நீண்ட காலமாக காத்துக்கிடக்கின்றோம்.

இதற்கு நீங்கள் விரைந்து தீர்வுகண்டு தரவேண்டும் என கண்ணீர் மல்க காணாமற்போன உறவுகள் தமது கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைத்தனர். (இ)

## தமிழர்...

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வியாபாரிகளுக்கு பல சலுகைகள் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

8 வயதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக 50,000 ரூபா வரையில் வழங்குவதாகவும், பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவ, மாணவிகளுக்கு 10,000 ரூபா வரையில் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மஹாபொல புலமைப் பரிசில் திட்டத்தை 6,000 ரூபாவாக உயர்த்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 25,000 ரூபாவாக உயர்த்துவதுடன் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை 3,000 ரூபாவினால் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அனைத்து குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படுவதுடன், அனைத்து வீடுகளுக்கும் ப்ரோட்பேண்ட் (Broadband) வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதனூடாக இளைஞர், யுவதிகளை இணைய யுகத்திற்கு அழைத்துச்செல்ல எதிர் பார்ப்பதாகவும், அவர்களின் பங்களிப்புடன் நாட்டை நவீன யுகத்தை நோக்கி பயணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும் நேற்றைய நிகழ்வில் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## காணாமற்..

இவ்வாறு தெரிவித்தார். காணாமற்போனவர்களை கண்டுபிடிப்பது தொடர்பில் எனது நேரடிக் கண்காணிப்பில் புதிய செயலகம் ஒன்றை விரைவில் உருவாக்கி அதன் அதிகாரிகள் மூலம் விசேடமாக விசாரணைகளை மேற்கொண்டு அவர்களைக் கண்டுபிடிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் விரைவில் மேற்கொள்வேன்.

இச்செயலகம் நேரடியாக எனக்கு கீழ்தான் செயற்படும். அந்த அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் ஒவ்வொரு கடிதத்திற்கும் நான் நேரடியாக பார்த்து தீர்வு காண்பேன்.

ஏதாவது இடங்களில் உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டால் அங்கு உங்களை பூரண பாதுகாப்போடு அங்கு சென்று பார்க்கவும் நடவடிக்கை எடுப்பேன்.

உங்களுக்கு தெரியும் இப்போது பொதுத் தேர்தல் அண்மித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு இப்போது நடவடிக்கை எடுத்தால் வேறுவேறு பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே அடுத்த மாதம் 18 ஆம் திகதி பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் உங்களை நான் மீண்டும் சந்திக்க நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன்.

இது தொடர்பில் விசாரிக்க பிரத்தியேகமான உத்தியோகத்தர்களை நியமித்து உங்களுடன் தொடர்புகொள்ள அவர்களுக்கு பொறுப்பளிப்பேன். இன்று (நேற்று)இதுபோன்ற பிரச்சினைகளுடன் மக்கள் என்னைச் சந்திப்பார்கள் என எனக்குத் தெரியும். எனவே உங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பேன்.

எமது பிரதிநிதி மூலமாகவோ அரச அதிபர் மூலமாகவோ அல்லது ஆளுநர் மூலமாகவோ நீங்கள் என்னை சந்திக்கலாம். தேர்தல் முடிவடைந்தவுடன் நிச்சயம் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

நான் உங்களுக்காக செய்யக்கூடிய ஆகக்கூடிய அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன். உங்கள் பிள்ளைகளை இங்கு காட்டினீர்கள். இந்த பிள்ளைகளை எனது சொந்த பிள்ளைகளாகத்தான் நான் பார்க்கின்றேன். இதே போல பேரப்பிள்ளைகள் எனக்கு இருக்கிறார்கள். எனவே இந்தப் பிள்ளைகளுக்கான எந்த உதவியையும் நான் செய்வேன்.

வரும் பொதுத்தேர்தல் முடிவடைந்தபின்னர் இதனை நான் கண்டிப்பாக செய்வேன் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர்
(ஈ.பி.டி.பி. தென்மராட்சி இணைப்பாளர்)




X 10

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# உங்கள் வாக்குச் சீட்டுக்களை சிறந்த முதலீடாக்குங்கள்

## வடமாகாண உறுப்பினர் தவநாதன்





மீள் குடியேற்றத்திற்குப்பின் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு மிக முக்கிய காரணமாக திகழ்பவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்களே, எதிர் அரசியல் தரப்புக்களாலும் வரவேற்கக்கூடிய வகையில் அவர் மிகக்கடினமான உழைப்பை செலுத்தியுள்ளார்.

என வடக்குமாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் வட்டக்கச்சியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

தேர்தல் என்பது ஒரு சமூகத்தின் அல்லது இனத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற களம் அதில் செயற்திறன் கொண்டவர்களையும் மக்களுக்காக சேவையாற்றக்கூடியவர்களையும் தெரிவுசெய்யும் முறைமையே அனைத்து நாடுகளிலும் நடைமுறையில் இருக்கின்றன. ஆனால் எமது தமிழ்ச் சமூகத்தினிடையே மட்டும் கடந்த 1977ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதி தொடக்கம் இன்று வரை ஒரே வகையான கோசத்தைக் கூறி ஒரு அரசியல் தரப்பு மக்களின் வாக்குகளை அபகரித்துக் கொண்டு செல்கின்றது. கடந்த சில வருடங்களுக்குமுன்னர் அடுத்த வருடத்தில் அரசியல் தீர்வு என்றார்கள் பின் இரண்டு வருடங்களாக தீர்விற் கான காலக் கெடுக்களை பின் தள்ளி வந்தார்கள் அதேபோன்று இம்முறையும் அடுத்து வரும் ஒரு வருடத்திற்குள் தீர்வு கிட்டுமென்று குறிப்பிடுகின் றார்கள்.

ஆனால் கடந்த ஐம்பது வருடங்களாக தொடரும் பிரச்சினைப்கு ஒரு வருடத்தில் தீர்வை எட்டுவதென்பது சாத்தியமற்றது கடந்த காலங்களில் அவர்கள் வாக்குகளைக் கவருவதற்காக பயன்படுத்திய வசீகரமான வார்த்தைப்பிரயோகங்கள் அனைத்தும் இன்று போலிக் கோசங்கள் என மக்களால் தெளிவாக உணரப்பட்ட நிலையில் தற்போதைய தேர்தலுக்காக அவர்கள் பயன்படுத்தும் ஒரு வசீகராமன வார்த்தைப் பியோகமாக

வே ஒருவருடத்தில் தீர்வு என்ற என்ற வாக்கியமும் மேலும் சில வர்க்கியங்களும் அமைந்துள்ளன.

ஆனால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரை பொறுத்தவரை மக்களுக்கு பொய்யாக எந்த வாக்குறுதிகளையும் வழங்காதவர் செயல் வடிவம் கொடுக்கக்கூடிய விடையங்கள் தொடர்பாக மட்டுமே மக்களுக்கு வாக்குறுதியளிப்பதும் அதற்காக உழைப்பதுமே அவரது பலம். எதிர் அரசியல் கட்சிகள் கூட அவரது சேவையை குறைத்து மதிப்பிடவில்லை ஏனெனில் அவரின் பிரசன்னம் கிளிநொச்சி மாவட்டத்தில் இல்லாதிருப்பின் இங்கு எதுவுமே நடைபெற்றிருக்க மாட்டாது என்பது அனைவரும் தெளிவாக உணர்ந்த உண்மை. மக்களின் எண்ணங்களுக்கமைவாகவும் எமது கட்சியின் தீர்மாணத்தின் அடிப்படையில் அவர் இம்முறையும் நாடாளுமன்றத்தேர்த்தலில் போட்டியிடுகின்றார்.

எனவே அவருக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்குகளும் மக்கள் தமது மேம்பாட்டுக்காக இடுகின்ற் முதலீடாகவே அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வட்டக்கச்சியில் நடை பெற்ற கலந்துயைாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# நாடு முழுவதும் WIFI இலங்கையுடன் கூகிள் ஒப்பந்தம்



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இணையத்தள வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு, இலங்கை அரசாங்கத்துடன் இணைய ஜாம்பவானான கூகுள், ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

எதிர்வரும் 5 மாதங்களுக்குள் இந்த ஒப்பந்தம் செயற்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், அதி உயரத்தில் அமைக்கக்கூடிய 13 பலூன்களை கூகுள், இலங்கைக்கு வழங்கவுள்ளது.

அதன்பின்னர், உலகளாவிய ரீதியில் wifi இணைப்பைக் கொண்ட முதலாவது நாடாக இலங்கை மாறும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அவரது உத்தியோக பூர்வ டுவிட்டர் வலைத்தளத்தில் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரசார அலுவலகம் மீது தெற்கில் தாக்குதல்

(கொழும்பு)

மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கம்பஹா மாவட்ட தேர்தல் பிரசார அலுவலகங்களுக்கு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் இனந்தெரியாத நபர்களால் 07 பிரசார அலுவலகங்கள் தாக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் தனது முக்கிய 07 தேர்தல் பிரசார அலுவலகங்கள் தாக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுநாயக்காவில் வெடிகுண்டு மீட்பு

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு அருகாமையில் 50 கிலோ எடையில் வெடிகுண்டொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வடிகான் தோண்டும் பணியில ஈடுபட்டிருந்த விவசாயிகள் சிலரே இவ் வெடிகுண்டைக் கண்டெடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகள், 2007ஆம ஆண்டு மேற்படி விமான நிலையத்தின்மீது மேற்கொண்ட தாக்குதலின்போது இவ்வெடிகுண்டு தவறுதலாக குறிப்பிட்ட இடத்தில் வீழ்ந்து அமிழ்ந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விமான நிலையத்தின் வான்படை வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் அதிகாரிகளிடம் இவ் வெடிகுண்டு கையளிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் கடமை மறுப்பு தொழிற்சங்கம் கவலை

வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) உத்தியயோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கான கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளது.


வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் அரசியல் கட்சியையோ அன்றேல் வேட்பாளர்களைச் சார்ந்து செயற்படுவார்கள் என்கின்ற சந்தேகத்தின் பெயரில் இக்கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தங்களையும் தேர்தல் கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தினால் இக்கோரிக்கையானது தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல்கள் ஆணையாளரினால் மறுப்பு தெரிவிக்கப்பட்டதையடுத்து அதிருப்தி வெளியிட்டுள்ள தொழிற்சங்கமானது அரசினால் தாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் தமக்கான சலுகைகளை பெற்றுத்தருவதில் அரசு பின்னடிப்புக்களை மேற்கொண்டுவருவதாகவும் கவலை தெரிவித்துள்ளது.

எனினும் இந்தக்கோரிக்கை மறுக்கப்பட்டதன்வாயிலாக நாடு முழுவதிலுமுள்ள வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்களை அரசியல் சார்புடையவர்களென கொள்ள முடியாதென்றும் இனி வரும் காலங்களில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் செயலகம் முன் னெடுக்குமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


# கலாமிற்கு ஜனாதிபதி இரங்கல்




நேற்று முன்தினம் இறந்த இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று மொழிகளிலும் ருவிட்டர் சமூக வலைத்தளத்தில் இரங்கல் தெரிவித்துள்ளர். அதில்-

"அப்துல்கலாம் இந்தியாவை புதியதொரு யுகத்திற்கு அழைத்துச் சென்ற தலைசிறந்த மனிதர் மௌனித்துவிட்டார் எப்போதும் எமக்கு முன்னுதாரணமாயிருப்பீர்கள்"

எனக் குறிப்பிட்டிருந்தார்.





நேற்று முன்தினம் மறைந்த இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் உடல் நேற்று குவாகட்டி விமான நிலையத்திலிருந்து டில்லி பாலம் விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது முப்படையினரும் மரியாதை செலுத்தியதையடுத்து அவரது உடலுக்கு பிரதமர் நரேந்திர மோடி மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியதுடன் இந்திய ஜனாதிபதி பிரணாப்முகர்ஜி ஆகியோரும் மரியாதை செலுத்தினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.